மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 2 | 15 - 3 - 54 | இதழ் 22

மடாதிபதிகளின் முன் மண்டியிட மறுத்துக் கொள்கைக்காக
வாதிட்டு நின்ற சீர்திருத்தச் செம்மல்

ஜான் ஹஸ்

இறுதியில் கொலைதண்டனை விதித்தனர்; அதனை உவகையுடன் ஏற்றார்!

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா 5

ராயுடன் சிலநாட்கள்

அரசியல் பேரறிஞர் எம். என். ராய் அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேற்றையும், அவருடன் சிலநாட்கள் உடன் உறையும் வாய்ப்பினையும் அறிஞர் அண்ணா அவர்கள் பெற்றிருந்திருக்கிறார்கள்.

அறிஞர் ராயின் அழைப்பின்பேரில், பெரியார் ராமசாமியோடு அறிஞர் அண்ணா அவர்கள், வடநாட்டுச்சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டுச், சில முக்கியமான நகரங்களில் சொற்பொழிவாற்றினார்கள். அப்பொழுது டேராடூனில் அறிஞர் ராயின் விருந்தினராக இருக்கும் வாய்ப்பு அறிஞர் அண்ணாவுக்கு ஏற்பட்டது. எம். என். ராயும் அவரது துணைவியார் எலென் ராயும் மகிழ்ச்சியோடு வரவேற்று, அறிஞர் அண்ணாவோடும் பெரியாரோடும் பேசி மகிழ்ந்திருந்தார்களாம். அண்ணாவுக்கு அடிக்கடி டீ சாப்பிடுவதில் மிக்க விருப்பம் என்பதைத் தெரிந்துகொண்ட எலென் ராய், அடிக்கடி டீ போட்டுக் கொண்டுவந்து கொடுப்பார்களாம். எம். என். ராய் சொல்லுவதைக் குறிப்பதும், மடல்களுக்கு விடையிறுப்பதும், டைப் அடிப்பதும் ஆன செயல்களை ராய்க்கு உதவியாக எலென்ராய் அவர்கள் செய்வார்களாம். சமையல் செய்யும்போது இருவரும் சேர்ந்தே எழுந்து சென்று, இருவரும் சேர்ந்தே செய்வார்களாம். ராய் அவர்களின் எளிய வாழ்வும், சலிப்படையாமல் பேசும் பண்பும், ஆழ்ந்த அறிவும், அன்புச் சொல்லும் அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளைகொண்டுவிட்டனவாம்.

எம். என். ராய் அவர்கள் கோவைக் கூட்டத்தில் பேசும்போது, கூட்டத்தில் எதிர்ப்புக் கூச்சலும், கலகமும் ஏற்பட, அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து பேசிக் கூச்சலையும், கலகத்தையும் அடக்கியதோடு, ராய் அவர்கள் தொடர்ந்து பேசுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்களாம்.

தம்முடைய கருத்துப் பரவுதலுக்கேற்ற பக்குவம் தென்னாட்டில் இருப்பதால், தம்முடைய பிற்காலத்தைத் தென்னாட்டிலேயே கழிக்க விரும்புவதாகக்கூட ஒருமுறை அண்ணாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது ராய் அவர்கள் குறிப்பிட்டாராம்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 - 3 - 54 திங்கட்கிழமை

கைத்தறி வளம்பெறுக!

கைத்தறிவாரம் மத்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் சென்ற 7-ந் தேதியிலிருந்து கொண்டாடப்பட்டது. கைத்தறியாளருக்குத் தகுந்த உதவியும், பாதுகாப்பும் அளிக்க வேண்டுமென்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகுந்த அக்கரை காட்டி வந்துள்ளது. கைத்தறியாளர் கண்கலங்கி நின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கைகொடுத்து உதவ முன்வந்தது. இழை இழையாக அவர்களுடைய உழைப்பில் நெருங்கிய ஆடைவகைகள் விற்பனைக் குறைவால் மலைபோல் குவிந்துவிட, அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, நெசவாளர் குடும்பங்கள் அகதிகளைப் போன்று ஊரைவிட்டு ஊர் பெயரும் நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், "செந்தமிழ் நாட்டினரே, கைத்தறி வேட்டி சேலைகள் வாங்கிடுவீரே!" என்று கைத்தறியாடைகளைச் சுமந்து, தெருத்தெருவாக விற்றுப், பொதுமக்களிடம் கைத்தறியின் மதிப்பைப் பெருக்கித், தொழிலுக்குப் புதிய உயிரைத் தந்தனர். சென்ற ஆண்டுப் பொங்கலின் போது அவர்கள் செய்த விற்பனையின் காரணமாக, லட்சக்கணக்கில் கைத்தறி ஆடைவகைகள் உடனடியாக விற்பனையானதுடன், அதன்பின் கோடி ரூபாயளவுக்கு முடங்கிக்கிடந்த கைத்தறித்துணிகள் விற்றுப் போகவும் வழி பிறந்தது. அதைத் தொடர்ந்து, இந்த ஆண்டுப் பொங்கலின்போது கைத்தறித்துணிகளை ஆதரித்திட, நமது கழகம் பாடுபட்டது. இதனால் லட்சக்கணக்கான குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டதுடன், நொடித்துப்போன நெசவுத் தொழிலும் வளம்பெறத் தொடங்கியது. எனவே, இப்பொழுது நடைபெற்றக் கைத்தறி வாரக் கொண்டாட்டத்தில், நமது ஆதரவையும், நல்லெண்ணத்தையும் சிறந்திடும் முறையில் அளித்தோம்.

கைத்தறி வியாபாரத்தில் அடிக்கடி தேக்கமும், நெருக்கடிகளும் உண்டாகின்றன. ஒரு சமயத்தில் வேண்டிய அளவு கைத்தறி துணிகள் கிடைக்காமல், குறைந்து இருக்கும். அதற்காகத் தறிகளைத் துரிதப்படுத்தி, அதிகத் துணிகளைக் குவித்தால் பின் மார்க்கட்டில் தேக்கம் ஏற்பட்டுக், கைத்தறியாளருக்கு வேலையில்லா நிலைவந்து அவர்கள் ஊரைவிட்டு ஊர் ஓட வேண்டிய நிலை உண்டாகிறது. கைத்தறித் தொழிலின் பொருளாதாரம் இன்னும் ஒரு பலமான நிலையை அடையவில்லை. மற்றத் தொழிலில் இருப்பதைவிட, அதிகமான ஏற்றத்தாழ்வுகள் வருகின்றன. அதைநீக்கிக், கைத்தறிக்கு வலுவான அமைப்பை உண்டாக்கி, நெசவாளருக்குத் தொடர்ந்து வேலை தரவும், உற்பத்தியான துணிவகைகளுக்கு உள்நாடு, வெளிநாடு விற்பனை வசதிகளைச் செய்து தரவும், சிதறிக்கிடக்கும் லட்சக்கணக்கான நெசவாளர்க்கு உதவிபுரியவும், பாதுகாப்புத் தரவும் கூட்டுறவுச் சங்கங்களை உண்டாக்கவும், அரசாங்கம் முன்னைவிட அதிகம் முயற்சிக்கவேண்டும். அத்துடன் தனிப்பட்ட நெசவாளர்கள் தமது பொறுப்பிலேயே இயந்திர வசதிகளினால் உற்பத்தியைப் பெருக்கி, வருவாயை அதிகப்படுத்தவும் அரசாங்கம் உதவவேண்டும். குடிசைத்தொழில்களென்று பழைய முறையை அப்படியே நீடிக்க வேண்டுமென்று நினைக்காமல், தற்கால விஞ்ஞான வசதிகளையும் நெசவாளர்க்கு உதவியாகத் தந்து, கைத்தறிக்கு மேன்மையுண்டாக்கச் செய்யலாம். அரசாங்கம் இவற்றில் கவனம் செலுத்துமாக!

பொதுக்குழு முடிவுகள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம், போராட்டங்களுக்குப் பிறகு, 7-3-54 ஞாயிறன்று, திருச்சியில் சீரும் சிறப்பும் பெற நடந்தேறியிருக்கிறது. சென்ற கூட்டத்திற்கும் இந்தக் கூட்டத்திற்கும் இடையில் தீட்டப்பட்ட திட்டங்கள், செய்யப்பட்ட பணிகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நடைபெற்ற போராட்டங்கள் ஆகியவைபற்றி ஆராய்ந்து, இனிச் செய்யப்பட வேண்டியவைகளைப்பற்றிக் கழகத்தின்

பொதுக்குழு திட்டவட்டமான சிலபல முடிவு களை எடுத்திருக்கிறது.

கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம், ஆரம்பக்கல்வித்திட்ட எதிர்ப்புப் போராட்டம் ஆகியவை குறித்து அவ்வப்போது எடுக்கவேண் டிய நடவடிக்கைகளுக்காகப் பொதுச்செய லாளருக்குத் தனி உரிமை வழங்கியும், சித்தூர்ப் போராட்டத்தைக் கவனிக்கத் தனிக்குழு ஒன்று நிறுவியும், நாஞ்சில் பகுதியைத் தமிழ கத்தோடு இணைப்பதற்கான நடவடிக்கைகளைக் கவனிக்கத் தனிக்குழு ஒன்று நிறுவும் உரிமை யைப் பொதுச்செயலாளருக்கு அளித்தும், அமெரிக்கா—பாக்கிஸ்தான் போர்ப்படை உதவி உடன்படிக்கையைக் கண்டித்தும், இந்தியா—இலங்கை உடன்படிக்கையின் போக் கைக் கண்டித்தும்—நீதிதரும் வகையில் திருத் தக்கோரியும், வடஆற்காடு மாவட்டத்தில் களம்பூரில் நடைபெற்றுவரும் உழவர் கிளர்ச் சியை ஆதரித்தும், கழகப் போராட்டங்களில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு உதவி நிதி வழங்க விரும்பியும் முக்கியமான முடிவுகள் சில பொதுக்குழுவால் நிறைவேற்றப்பட்டுள் ளன.

தோழர் என். வி. நடராசன் அவர்களைத் தலை வராகவும், வட ஆற்காடு மாவட்டச் செய லாளர் தோழர் ஏ. எல். சி. கிருட்டினசாமி,செங் கற்பட்டு மாவட்டச்செயலாளர் தோழர் சி வி. எம். அண்ணாமலை, மற்றும் இருவர் ஆகியோர் உறுப்பினராகவும் அமைந்த குழு ஒன்றைச் சித்தூர்த் தமிழ்ப்பகுதி இணைப்பு முயற்சியைக் கவனிக்க என்று நிறுவப்பட்டிருப்பது பெரி தும் போற்றுவதற்குரியதாகும். சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமி ழகத்தோடு இணைக்கவேண்டும் என்ற கருத்தை அப்பகுதியிலுள்ள மக்களையெல்லாம் உணரும் படிச் செய்வது, அதற்காகப் பிரச்சாரம் நடத் துவது, எல்லைக்கமிஷன் வரும்போது அதனிடம் அறிக்கை கொடுப்பது, கிளர்ச்சிகள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படின் அதற்கான திட்டங்களைப் பொதுச்செயலாளரைக் கலந்து கொண்டு தீட்டுவது, கிளர்ச்சிகளை நடத்துவது, அமைதியான முறையில் தமிழர் - தெலுங்கர்க் கிடையே நல்ல சூழ்நிலை நிலவும்படிச் செய்தல் போன்ற இன்னபிற பணிகளையெல்லாம், அக் குழு இயன்றவரையில் செய்து, வெற்றி கிட் டுவதற்கான வாய்ப்பினைத் தேடும்.

உயிரிழந்தோர் குடும்பங்களுக் 'உதவிநிதி திரட்டும் அறிக்கை பொதுச்செயலாளர் அவர் களிடமிருந்து வந்தவுடன், தூத்துக்குடி நிதி திரட்டித் தந்ததைப்போல, அதனையும் திரட் டித்தரக் கழகத்தோழர்கள் முற்படுவார் களாக!

பொதுவாகப் பொதுக்குழுவில் நிறைவேற் றப்பட்ட எல்லா முடிவுகளையும் வெற்றிகர மாக்கும் முயற்சியில் கழகத்தோழர்களனைவரும் மிகத்தீவிரமாக ஈடுபடுவோமாக!

வி. வி. டி. மறைவு

திராவிட மக்கள் வளர்ச்சியில் நீங்கா அக் கறையும், ஏழை எளியவர்களிடத்தில் குறையா அன்பும், அண்டினோர்க்கு ஆதரவு அளிப்பதில் தணியா ஆர்வமும், திக்கற்றோர்க்கு வழிகாட் டுவதில் விடா முயற்சியும் கொண்டு அரும் பணி ஆற்றிவந்த உயர் மதிப்பாளர் தூத்துக்குடி தோழர் வி. வி. தனுஷ்கோடி அவர்கள் இயற்கை எய்திய செய்தி, நமக்கு நிரம்பிய துக்கத்தையும், துயரத்தையும் தருகிறது. பொதுவாகத் தூத்துக்குடிப் பொதுமக்களும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக்கழகத் தாரும் ஒரு சீரிய பொதுப்பணியாளரை இழந்துவிட்டனர். இழப்பு பேரிழப்பு; ஈடு செய்ய முடியாத அளவுக்குப் பேரிழப்பு. தூத்துக்குடி சதிவழக்கில் ஈடுபடுத்தப்பட்ட தோழர்களை மீட்க, அவர்கள்மீது வீசப்பட்ட மாசினைத் துடைக்கப், பழிச்சொற்களைப் போக்க எல்லாவகையிலும் பேருதவியாக இருந் தார்; அவர் உதவி இன்னமும் எவ்வளவோ தேவைப்படுகிறது; இந்த நிலையில் அவர் நம்மினின்றும் அடியோடு பிரிக்கப்பட்டுவிட் டார். நினைத்தாலே நெஞ்சு துக்கத்தில் ஆழ் கிறது. நமது துக்கத்தை அடக்கிக்கொண்டு, அவரைப் பிரிந்து ஆழ்ந்த துயரத்தில் மூழ்கி யிருக்கும் அவரது குடும்பத்தார்க்கு, நாம் நமது பரிவினை உரித்தாக்கி, அவர்களுக்கு ஆறுதல் அளிப்போமாக!

கருத்துக் கதிர்

சித்த மருத்துவம்

நமது நாட்டில், மக்களின் நோய்நொடிகளைத் தீர்ப்பதற்காக நிலவிவரும் மருத்துவமுறைகளில், அலபதி, ஹோமியோபதி, சித்தம், ஆயூர்வேதம், யுனானி போன்ற பல பிரிவின இருக்கின்றன. அலபதியைத்தான் ஆங்கில மருத்துவமுறை என்பார்கள். நமது நாட்டில் எங்கணும் பெருவழக்காய், புதியகால விஞ்ஞான அறிவின் அடிப்படையில் வளர்ந்து வருவதாய் இருப்பது ஆங்கில மருத்துவமுறையாகும். ஹோமியோபதி ஜெர்மனி மருத்துவ முறை; அவ்வளவு சரியாகப் பரவாதது. புதிய காலத்தை ஒட்டிய முறையில் வளர்ந்து வருவனவற்றில் ஆங்கில முறை சாலச்சிறந்தது என்றாலும், ஏழை இந்தியாவால் அதனை எளிதாகவும், குறைந்த செலவிலும் பெறமுடியவில்லை. குறிப்பாகச் சிற்றூர் மக்களால் அதனை அவ்வளவு எளிதாகவும், குறைந்த செலவிலும் அடைய முடிவதில்லை.

மற்ற முறைகள் கீழைநாட்டு முறைகள், யுனானி அரேபியா முறை; ஆயுர்வேதம் வடநாட்டு முறை; சித்தம் தென்னாட்டு முறை. செலவு அதிகமாகவுள்ள—எல்லோராலும் சமாளிக்கமுடியாத மேல்நாட்டு மருத்துவமுறையைக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும், செலவு குறைவாகவுள்ள—சமாளிக்கக்கூடியதாகவுள்ள கீழைநாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், மக்களுக்குச் சிறிது மிகவான நன்மையைச் செய்யமுடியும் என்று பொதுவாக இந்திய அரசியலாரும், குறிப்பாகச் சென்னை மாநில அரசியலாரும் கருதி, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார்கள்.

கீழைநாட்டு முறைகளைப் பரப்புவதற்கான வகையில் திட்டங்களைத் தீட்ட அமைக்கப்படும் குழுக்களில், ஆயுர்வேதத்திற்கு ஆதரவு தருவோர் அதிகம்பேர் இருப்பதால், அக்குழுக்கள் ஆயூர்வேதத்திற்குக் காட்டுகிற சலுகையையும், ஆக்கத்தையும் சித்த மருத்துவத்துக்குக் கொடுக்க ஒருக்காலும் ஒருப்படுவதில்லை. ஆயுர்வேத முறையையும், அடுத்தபடியாக யுனானி முறையையும் வளர்க்கவே அரசாங்கத்தின் ஆதரவு, ஆற்றல், பொருள், உழைப்பு ஆகியவைகள் செலவழிக்கப்படுகின்றனவேயல்லாமல், சித்த மருத்துவம் வளரவும். பரவவும் அவை செலவழிக்கப்படுவதேயில்லை. மருத்துவமுறையிலும் வடநாட்டவரின் ஆதிக்கம் எந்த அளவுக்குச் செலுத்தப்படுகின்றது என்பதற்கு இதுவே போதிய சான்றாகும்.

தென்னாட்டைப்பொறுத்த வரையில், தென்னாட்டோடு இயைந்து தோன்றி வளர்ந்த மருத்துவ முறை சித்த மருத்துவமாகும். கீழைநாட்டு மருத்துவமுறைகளில், தென்னாட்டிற்கு ஏற்றதாகவும் எளிதாகவும் கிடைக்கக்கூடிய மருத்துவமுறை ஒன்று இருக்கக் கூடுமானால், அது சித்த மருத்துவமாகத்தானிருக்கமுடியும். தென்னாட்டு மக்களின் உடற்பாங்கையும், தென்னாட்டின் தட்ப வெப்ப நிலையையும், சுற்றுச் சூழ்நிலையையும், உணவு வகையையும், சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய மருந்துவகைகளையும் பொறுத்து வளர்ந்த முறை, சித்த மருத்துவமாக இருக்கமுடியுமேயொழிய, அது அராபியாவில் தோன்றிய யுனானி முறையாகவோ, வடநாட்டில் தோன்றிய ஆயுர்வேத முறையாகவோ இருக்கமுடியாது. தென்னாட்டிற்கு ஏற்ற மருத்துவமுறை, சிற்றூர்களிலும் பேரூர்களிலும் எளிதில் பரவக்கூடிய, இன்றும் நிலவிவருகிற மருத்துவமுறை சித்த மருத்துவ முறையே யாகும். எனவே, தென்னாட்டைப் பொறுத்தவரையில், ஏற்றதாகவும், குறைந்த செலவிலும், கிடைக்கக்கூடியதாகவும்

யார் நாத்திகன்?

கடவுளிடம் நம்பிக்கை அற்றவனை நாஸ்திகன் என்றன பண்டைய மதங்கள். தன்னிடம் நம்பிக்கையற்றவனே நாஸ்திகன் எனப் புதிய நெறி புகட்டுகின்றது.

—விவேகானந்தர்.

இருந்துவருகிற சித்த மருத்துவ முறைதான், வளர்க்கப்படவேண்டியதும், பரப்பப்படவேண்டியதாகும்.

சித்த மருத்துவமுறையும், ஆங்கில மருத்துவமுறையும் இணைந்த முறை ஒன்று, தென்னாட்டில் பரப்பப்பட்டால், அதுவே மக்களுக்குப் போதுமானது; வேறு மருத்துவமுறை எதுவும் அவசியமில்லை. சென்னை அரசியலார் இதில் மிக நாட்டஞ் செலுத்தவேண்டும்; அவர்களை நாட்டஞ்செலுத்தும்படி வைக்க வேண்டிய பொறுப்பு சித்தமருத்துவர்களுடையதும், பொதுமக்களுடையதுமாகும்!

தேர்வின் முடிவு சரிவே

மீண்டும் பெருத்த அளவில் வெற்றிகண்டு, தனிப்பட்ட முறையில் பலமான மந்திரி சபையை அமைத்துவிடலாம் என்ற நினைவுடன் தான், காங்கிரஸ், திருவாங்கூர்—கொச்சின் தேர்தலுக்குத் தயாரானது. மிக விரிவான முறையில், தனது முழு பலத்தையும் முன்வைத்து, காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தை நடத்தியது. பிரசாரத்தை நடத்திவைக்க, ஆசியாவின் ஜோதியான பண்டித நேரு அலகாபாத்திலிருந்து பறந்துவந்தார்; பிரசார விழாவைத் தொடங்கிவைக்க மாம்பலத்து மதியூகி, ஆச்சாரிய ஸ்வாமிகள் அழைக்கப்பட்டிருந்தார்; காங்கிரஸ் கொட்டும் போர்ப்பறை கேட்டுப் பம்பாய் காங்கிரஸ் தலைவர் பட்டீலும் வந்து சேர்ந்தார்; அவரையடுத்துப் பம்பாய் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாயும் விரைந்து சென்றார். இவ்வளவு ரணகளச் சூரர்களும் அங்கே சல்லடம் கட்டிக்கொண்டு, சங்கநாதம் செய்தார்கள். காங்கிரசின் பத்திரிக்கை பலம் முழுவதும் திருவாங்கூர்—கொச்சின் தேர்தலுக்கு அழைக்கப்பட்டது. தோட்ட முதலாளிகளின் பணப்பெட்டி ஆதரவாயிற்று; கத்தோலிக்க மதக்குருமார்களின் பிரார்த்தனைகள் காங்கிரஸ் வெற்றிக்காக ஆண்டவனிடம் தூதனுப்பியபடி இருந்தன. ஆனால் இவ்வளவு பேச்சுக்கள், எழுத்துக்கள், விளம்பரங்கள், பணங்காசுகள், பிரார்த்தனைகள் நடந்தும், காங்கிரஸ் 117 தொகுதிகளில் 45-ல் மட்டுமே வெற்றியடைய முடிந்தது. காங்கிரசின் பிரசார பலத்துடன், வாக்குச் சீட்டு சேர்க்கும் வசதிகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் எதிர்க்கட்சிகளின் பலம் மிகமிகக் குறைவானது. ஆனாலும், அந்த எதிர்க்கட்சியினர், நேருவின் ஜோதியையும், ஆச்சாரியாரின் கீதோபதேசத்தையும், பட்டீல் பாடிய பல்லவிகளையும், மொரார்ஜி நிகழ்த்திய முழக்கங்களையும் தாண்டி, பெருவாரியான இடங்களைப் பிடித்துக்கொண்டதுடன், இன்று திருவாங்கூர்—கொச்சியில் எதிர்க்கட்சியினர் மந்திரிசபையமைக்கும் நல்ல நிலை ஏற்பட்டது. சே! சே! இதற்காகவா கும்பமேளாவைக் கண்டுகளித்த களைப்புத் தீர்வதற்குமுன், நேரு பண்டிதர் திருவாங்கூர் ஓடோடியும் வந்தார்!

காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுதாவது உணரவேண்டும், கரைந்துவருகிற காங்கிரஸின் செல்வாக்கை வெறும் வீரம், காட்சி ஜோடனைகள், இவைகளால் திரும்பவும் பெறமுடியாதென்பதை. கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக்கொடுத்த சொல்லும் நீண்டநாளைக்கு வராதென்று ஒரு பழமொழி இருக்கிறது. அதைப்போல, இப்பொழுதைய காங்கிரஸின் முன்னோர்கள் கட்டிக்கொடுத்த சோற்றை வைத்துக்கொண்டு இவ்வளவு நாளும் அவர்கள் காலந்தள்ளிவிட்டனர். இனிமேலும் அவ்வாறு இருக்கமுடியாது. தடைகளை மீறியும், தடியடி தாங்கியும் நூற்றுக்கணக்கானவர்கள் தேசிய இயக்கத்துக்குத் தந்துவிட்டுப்போன செல்வாக்கை வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் பதவிகளில் அமர்ந்தது. இன்று அந்தச் சொத்து பூராவும் செலவழிந்துவிட்டது. இருந்தாலும், சொத்தையெல்லாம் இழந்துவிட்ட பின்னும், பழைய பகட்டும், ஆடம்பரமும் குறையாமல், ஊர்சுற்றிக், கண்டவர்களைப் பணியவைக்க முயற்சிக்கும் மாஜி பணக்காரனின் நிலைக்குக் காங்கிரஸ் வந்திருக்கிறது.

தேசியத்தின்பேரால் சேமிக்கப்பட்ட செல்வாக்கும், உண்டாக்கப்பட்ட சூழ்நிலையும் இன்று கழிந்துவிட்டன. மக்களின் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள புதிய எழுச்சியை, ஆவலை, தேசியத்தின் பெயர் சொல்லித் தடுத்துவிட முடியாது. மக்களின் உரிமைகளுக்கும், முற்போக்குக்கும் தடைசெய்யும் விதத்தில் காங்கிரஸ் இருந்ததால்தான், அதன் பழம் பெருமையும், பிரசாரத்துக்கு வந்த தலைவர்களின் பெருமையும் அதிகமாக இருந்தபோதிலும், கடைசியாக தேர்தல் முடிவுகள் வெளிவந்தபோது காங்கிரசின் சரிவு மீண்டும் வலியுறுத்தப்பட்டுவிட்டது.

கல்வி படும் பாடு

இரா. செழியன்

"அறிவுக்கோவ்வாத கோட்பாடு, ஆவேசம், விசித்திர மனப்போக்கு இவைகளின் போறுப்பில் வளரவேண்டிய ஒரு இளைஞர் பரம்பரையை ஒப்படைத்துவிடுவது மிகப் பயங்கரக் கொடுமையல்லவா? கூட்டல், கழித்தல், கணக்கு விவரங்கள் துளிக்கூடத் தெரியாத ஒருவன் வியாபாரம் செய்ய முன்வந்தால், அவனது தெரியாத்தனத்தைக் கண்டு நாம் சிரிக்கிறோம் அவனது முயற்சி படுதோல்வியடையுமென முன்கூட்டியே கூறுகிறோம். உடல் அமைப்பின் நுணுக்கங்கள் தெரியாதவன், ரணசிகிச்சைச்சாலை ஒன்றை ஆரம்பித்தால், அவனுடைய அறியாத்தன்மையை—ஆணவப்போக்கைக் காண நாம் ஆச்சரியமடைகிறோம், அவனிடம் சிகிச்சை பெறப் போவோரைக் கண்டால் பரிதாபம் பிறக்கிறது. கல்வியின் பண்பாடுகளைச் சிறிதுகூடப் புரிந்துகொள்ளாதவர்கள் குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுத்து வளர்க்க முன்வரும்போழுது, அவர்களைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுவதில்லை. பலிகொடுக்கப்படும் குழந்தைகளைப் பற்றிப் பரிதாபம் உண்டாவதில்லை"

இவ்வாறாகச், சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்தில் சிறந்து விளங்கிய ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்ற அறிஞர், "கல்விமுறை" என்பது பற்றி ஆராய்ந்தபொழுது குறிப்பிட்டார். அவர் மீண்டும், இப்பொழுதுவந்து இந்திய உபகண்டத்தில் அலங்கோலப்படுத்தப்படும் கல்விமுறையையும், நாளைக்கொன்றாக அறிவிக்கப்படும் அபூர்வக் கல்வித்திட்டங்களையும் காண நேர்ந்தால், எத்தகைய கடுமையான சொற்களை வீசுவாரோ, தெரியாது!

இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியாவில் வளர்க்கப்பட்ட கல்வியமைப்பு, அதனால் கிடைத்த நன்மைகள் எல்லாம் ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் சின்னாபின்னமாக்கப்பட்டுவிட்டது. இப்பொழுதுள்ள நிலைமை நீடித்தால், இன்னும் ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் அது முற்றிலும் சிதைந்துவிடக்கூடும். தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனென்ற வகையில், ஆட்சிப்பீடத்தில் அமர—ஒட்டிக்கொள்ள வாய்ப்புக்கிடைத்த ஒவ்வொருவரும், உடனே தம்மைப் பெரும் நிபுணரென்ற நினைவுடன், தாறுமாறான திட்டங்களைத் தீட்டி, எதேச்சாதிகார முறையில் அமுலாக்கத் தலைப்பட்டுவிட்டனர். அவர்களுடைய விசித்திர மனப்போக்குக்கு—வேதனைதரும் திட்டங்களுக்கு இளஞ்சிறுவர்கள் பலிகொடுக்கப்படுகின்றனர், அவர்களுடைய எதிர்காலம் பாழாக்கப்படுகிறது. கல்விமுறையில் மாறுதலைச் செய்ய வேண்டும், அதனால் வரலாற்றில் ஒரு மாபெரும் காரியத்தைச் சாதித்ததாகப் பெயர் விளங்க வேண்டும் என்ற ஆசையுடன்—பெரும் ஆணவத்துடன், திட்டம் தீட்ட முன்வரும் ஆச்சாரியார், கல்வி முறையில் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழகத்தினர் இவர்களைக் கலந்துகொள்வதில்லை, அதுமட்டுமல்லாமல் புதிதாகக் கொணரப்படும் திட்டத்திலுள்ள குற்றங்குறைகளை அவர்கள் எடுத்துக்காட்டினாலும் திருத்திக்கொள்வதும் கிடையாது. சரியான திட்டம் போடத் தெரிவதில்லை, போட்ட திட்டத்திலுள்ள குறைகளை திருத்திக்கொள்வதுமில்லை. கண் குருடு, அத்துடன் காதும் செவிடு. அவன் எப்படி மற்றவர்களை அழைத்துக்கொண்டு வழிகாட்டமுடியும்?

அதிகாரத்திலிருப்பவர்கள் கல்வித்துறையில் வீணாகத் தலையிட்டு, ஆகாத திட்டங்களைத் திணிப்பதால், கல்வி நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டை நாம் கூறுகின்றோமென்றால், அரசியலில் எதிர்க்கட்சியார்கள் என்று தள்ளிவிடலாம். ஆனால் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், இந்திய உப கண்டத்தில் கல்வி நிபுணர்களின் முன்னணியில் வைத்தெண்ணப்படுபவர், அத்துடன் ஐக்கிய நாட்டுக் கல்வி, சமூக, சபைகளில் முக்கிய பங்கேற்று அவற்றின் தலைவராகவும் பணியாற்றிய அறிவும், திறனும் படைத்தவர் ஆகிய சர். ஏ. எல். இலட்சுமணசாமி அவர்களே அண்மையில் தந்த பேச்சொன்றில் மிகத்

தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதுடன், அதிகாரத்தின் போக்கைக் கண்டித்துமுள்ளார். சென்னையில் நடந்த பன்னிரண்டாவது ஆசிரியர் மாநாட்டில், அவர் பேசும்பொழுது, "சமீபகாலத்தில், ஆசிரியர்களின் வேலை முறைகளையும், பொறுப்புகளையும் பறிக்கும் விதத்தில் வளர்ந்துள்ள நிலைமை வருந்தத்தக்கது. ஆசிரியர்களின் பாதுகாப்பில் விடப்பட்டிருக்கும் மாணவர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் வகையில், அதிகாரத்திலிருப்போர் தலையிட்டுக் காரியங்கள் நடத்தும் போக்கை நான் மிகவும் கண்டிக்கிறேன்." என்று கூறியுள்ளார். கல்வி முறையில் தலையிட்டு, ஆகாத திட்டங்களைப் புகுத்தும் "அவதார புருஷர்"கள் இந்த எதிர்ப்புப் பேச்சை உணர்ந்து நடந்தால் நல்லது.

நாட்டின் கல்வி முறையைச் சிதைத்து, இளம் சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாழ்படுத்தும் அபூர்வத்திட்டங்கள் சென்னையில் மட்டுமல்ல, இந்திய உபகண்டத்தில் மற்ற பகுதிகளிலும் அமுலாக்கப்பட்டபடி யிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் அமைப்பிலும், நடைமுறையிலும், நோக்கத்திலும், வேறுபாடு இருந்தபோதிலும் கல்வி வளர்ச்சியைத் தடுப்பதில் மட்டும் ஒரேமாதிரி யிருக்கின்றன.

சென்னையில் ஆச்சாரியார் வந்ததும், புதிய கல்வித்திட்டமென்ற பெயரால் ஒரு பெரும் முட்டுக்கட்டையை சிறுவர்களின் கல்வியின் முன் போட்டார். இதை ஆசிரியர்களோ, பெற்றோர்களோ, பல்கலைக்கழகத்தினரோ, சட்டசபையினரோ எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் அவர் எதேச்சாதிகாரப் போக்கில் திட்டத்தை அமுலாக்க முயன்றார். இதைப் போலவே பம்பாயிலும் ஒரு திட்டம் வளர்ந்துள்ளது. அதன்படி, பம்பாய் மாநிலத்திலுள்ள கல்லூரிகளிலெல்லாம் ஆங்கிலமொழி அகற்றப்பட்டு, அதற்குப்பதில் எல்லாப் பாடங்களும் ஹிந்தி மொழியில் கற்பிக்கப்படுமாம். இந்த 'அரிய' திட்டத்தை பம்பாய்க் காங்கிரஸ் மந்திரி திங்கர் ராவ் தேசாய் வெளியிட்டுள்ளார். கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் பெரும் திட்டங்களை எவ்வளவு சுலபத்தில் அவர்கள் தீட்டிவிடுகின்றனர்!

பம்பாய் மாநிலத்தில் பெரும்பாலோரால் தாய்மொழியாகப் பேசப்படுவது மராத்தி மொழியாகும், அதற்கு அடுத்தபடி எண்ணிக்கையில் பார்த்தால் குஜராத்தி மொழிபேசுவோர் இருக்கின்றனர். பம்பாய் காங்கிரஸ் சர்க்கார் திட்டத்தின்படி, ஒரு மராத்தி சிறுவன், கல்லூரிக்குப் போனதும், ஆங்கிலத்தை விட்டுவிட்டு, மராத்தியையும் மறந்துவிட்டு, அந்தப் பகுதிக்கு அறிமுகமாகாத புதிய இந்தி மொழியில் கல்லூரிப்பாடங்களைக்கற்றுக்கொள்ளவேண்டும். பம்பாயில் பேசப்படும் மொழி மராத்தி, அத்துடன் இப்பொழுது ஆங்கிலம் சொல்லித்தரப்படுகின்றது. இனிமேல், காங்கிரஸ் மந்திரிசபையின் திட்டம் நிறைவேற்றப்பட்டால், இந்த இரண்டும் தள்ளப்பட்டு, இந்தி கட்டாயமொழியாக்கப்பட்டு கல்லூரிப்பாடங்களெல்லாம் அதில் நடத்தப்படும்.

தாம் தீட்டிய திட்டத்திலுள்ள குறைகளைச் சொன்னதும், அவற்றை ஏற்றுக்கொள்ளாது ஆச்சாரியார் எப்படி ஆணவத்துடன் நடத்தி வருகிறாரோ, அதேவிதமாக ஆணவத்துடன் பம்பாய்க் கல்விமந்திரியும், வரும் எந்தவித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தனது இந்தி மொழித் திட்டத்தை நிறைவேற்றப் போவதாகக் கூறியுள்ளார். பம்பாய் பல்கலைக் கழகம் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால்கூட, அதன் கீழிருக்கும் அரசாங்கக் கல்லூரிகளைப் பிரித்து வேறொரு பல்கலைக் கழகத்துடன் சேர்த்துக் கொண்டாவது, ஹிந்தி மொழிப் பாடங்களைப் புகுத்தப்போவதாக அவர் சொல்லுகிறார். அப்படிச் செய்தபின், "இந்திப் பாடமுள்ள கல்லூரிக்கு மாணவர்கள் வராமல், ஆங்கிலப் பாடமுள்ள கல்லூரிக்கு மாணவர்கள் அதிகமாகப் போக ஆரம்பித்தால் என்ன செய்வீர்கள்?" என்று அவரைக் கேட்டபோது, "இந்திப் பாடமுள்ள அரசாங்கக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் வராவிட்டால் பாதகமில்லை, கல்லூரிகளை மூடிவிடத் தயாராக இருக்கிறேன்" என்று காங்கிரஸ் கல்வி மந்திரி திங்கர்ராவ் தேசாய் பதிலளித்துள்ளார். விஞ்ஞானக் கல்வியைப் பெறவும், மற்றும் உயர்தரக் கல்லூரி அறிவைப் பெறவும், ஆங்கிலத்தை நீக்கிவிட்டால், இந்தி மொழியால் கொஞ்சங்கூட முடியாது. இந்தி தகுதியற்ற மொழியென்றும், அதைக் கல்லூரியில் கட்டாயமொழியாக்கப்படுவதற்குப் பல்கலைக்கழகம் ஒத்துக்கொள்ளாதென்றும், பொதுமக்கள் எதிர்ப்பு வருமென்றும், இந்தி மொழிக் கல்லூரிக்கு மாணவர்கள் வரமாட்டார்களென்றும், கல்லூரிகளை மூடினாலும்

மூடலாமே தவிர, தனது கல்வித்திட்டத்தைக் கைவிடப்போவதில்லை யென அவர் அறிவிக்கிறார். புதிய கல்வித் திட்டங்களைப் புகுத்துவதில் காங்கிரஸ் ஆளவந்தார்கள் எவ்வளவு ஆணவத்துடனும், வெறித்தன்மையுடனும், எதேச்சாதிகாரப் போக்குடனும் இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து நன்கு விளங்கும்.

ஆச்சாரியார் கல்வித்திட்டத்தில், "வண்ணான்மகன் வண்ணான் தொழிலைச் செய்து கொண்டிருக்கட்டும், வக்கீலாத்துப் பையன் மட்டும் வக்கீலாக வந்தால் போதும்!" என்ற வர்ணாச்சிரம வெறி அடிப்படையாக இருக்கிறது. பம்பாய் அரசாங்கம் புகுத்தும் கல்வித் திட்டத்தில் இந்தி ஏகாதிபத்திய வெறி அடிப்படையாக இருக்கிறது.

கல்லூரிகளில் இந்தி மொழியை வைக்க வேண்டுமென்று திட்டமிட்டுள்ள பம்பாய் அரசாங்கம், இதற்குமுன் ஒரு விசித்திர கல்வித்திட்டத்தை அமுலாக்க முயற்சித்தது. அதன்படி, ஆங்கிலோ—இந்தியரைத் தவிர்த்து, மற்ற இந்தியர்கள் தங்கள் சிறுவர்களை ஆங்கில மொழியைக் கற்கும் பள்ளிக்கூடங்களில் சேர்க்க முடியாது; அவர்களனைவரும் இந்திமொழியைச் சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களுக்கேப் போகவேண்டுமெனக் கட்டாயப் படுத்தப்பட்டது. ஆனால், அந்த உத்தரவு தவறானது என்று பம்பாய் உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்புக் கொடுத்தது. அதை மாற்ற, பம்பாய் அரசாங்கம் இப்பொழுது சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுச் செய்துள்ளது. அதன் முடிவு இன்னும் வரவில்லை. சுப்ரீம் கோர்ட் தரும் தீர்ப்பு எதுவாயிருந்தாலும், பம்பாய் அரசாங்கம், தனது கல்வித்திட்டங்கள் சரியானதா, அல்லவா என்பதற்குக் கல்வி நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்குப் பதிலாக, சட்ட புத்தகங்களைப் புரட்டி "இந்தத் திட்டத்தைப் புகுத்த எமக்கு அதிகாரமிருக்கிறதா, இல்லையா" என்று சட்ட நிபுணர்களின் உதவியைப் பெறவேண்டியிருக்கிறது. பம்பாய் காங்கிரஸ் மந்திரிசபைத் திட்டத்துக்கு, கல்வி நிபுணர்கள், பல்கலைக் கழகம் இவர்களின் எதிர்ப்பு இருந்தது, உயர்நீதி மன்றமும் எதிரான தீர்ப்பு தந்தது. இங்கு ஆச்சாரியார் கல்வித்திட்டம் அமுலாக்கப்படுவது, அவருடைய சட்டசபையிலேயே தோற்கடிக்கப்பட்டது. ஆச்சாரியார் திட்டத்தை நிறுத்தினாரா, அல்லது தோல்வியை யொட்டி மந்திரி சபையைக் கலைத்தாரா? கிடையாது. அரசியல் சட்டப் புத்தகத்துக்கு விளக்கங்கூறி பதவியை விட்டு அசையாமல் ஒட்டிக்கொண்டிருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியினர் போடும் கல்வித்திட்டங்களுக்கு, பொதுமக்களின் ஆதரவு கிடையாது, ஆசிரியர்களின் ஆதரவு கிடையாது, பல்கலைக் கழகத்தினரின் ஆதரவு கிடையாது, கல்வி வல்லுநர் ஆதரவு கிடையாது; ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, தமது அதிகாரத்தின் பலத்தையும், அதற்கு ஆதாரமாக நேரு பண்டிதரின் ஆதரவையும் பெற்றுத் தமது கல்வித்திட்டங்களை அமுலாக்க முடிகிறதேயன்றி, மக்களின் ஆதரவையும், கல்வித் துறையினர் ஆதரவையும் பெறமுடியவில்லை.

இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றி, அதற்குப் பதில் வர்ணாச்சிரமத் திட்டத்தை புகுத்திவிடவேண்டும்; இப்பொழுதுள்ள ஆங்கில மொழியை அகற்றிவிட்டு, எப்படியாது இந்தி மொழியை அங்கு வைக்கவேண்டுமென்று காங்கிரஸ் அதிபர்கள் துடிக்கிறார்களேத் தவிர, இப்பொழுதுள்ள கல்வி முறையில் என்னென்ன குறைகள் இருக்கின்றன? அவை புதிய திட்டத்தால்—"வண்ணான் மகன் வண்ணானாகவேச் சாகட்டும்; வக்கீலாத்துப் பையன் வக்கீலாகவே வாழட்டும்!" என்று குலத்தொழிலைக் கூறும் வர்ணாச்சிரமத் திட்டத்தால் எப்படி மாற்றியமைக்கப்படும்? இப்பொழுதுள்ள கல்வி முறையைவிட வர்ணாச்சிரமக்கல்விமுறை எந்த வகைகளில் சிறந்தது, உயர்ந்தது, எல்லோருக்கும் பலன்தருவது? ஆங்கில மொழியைவிட, இலக்கண, இலக்கிய, விஞ்ஞான வளமற்ற இந்திமொழி எந்தவகையில் சிறந்தது, பலன் தருவது? என்ற பல கேள்விகளுக்கு பதில் தர முடிவதில்லை. கேள்வி கேட்பவர்களை முதல் நம்பர் எதிரி, மூன்றாம் நம்பர் எதிரி என்று உருட்டிப் பேசவும், தடிகொண்டு விரட்டியடிக்கவும், துப்பாக்கிக்கொண்டுச் சுட்டுத்தள்ளவும் முடிகிறதேயன்றி, தக்க காரணங்கள் காட்டுவதில்லை, காட்ட முடிவதில்லை.

இப்பொழுதுள்ள கல்விமுறையை நீக்கிவிட்டு, வேறு பல புதிய திட்டங்களை ஏன் கொண்டுவர, காங்கிரஸ் ஆட்சியாளர் பாடுபடுகின்றனர் என்று நமக்கு மட்டுமல்ல, காங்கிரஸிலுள்ள பலருக்குப் புரியவில்லை; அதிலும் சாமான்ய காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்ல,

இதோ! இன்னும் ஓர் கல்வித் திட்டம்!

"மாணவர்களெல்லோரும் நான்கு மொழிகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, தாய்மொழி, ஹிந்தி, இங்கிலீஷ், சமஸ்கிருதம். இவற்றிலெல்லாம், எந்தக் காரணத்தை முன்னிட்டும், எந்த மாணவனும் சமஸ்கிருதம் படிப்பதைக் கைவிடக் கூடாது"

இந்த அரிய உரையை ஸர். எஸ். வரதாச்சாரியார் அளித்துள்ளார். பேசிய இடம் மைலாப்பூர் பள்ளிக்கூடமொன்றில். வரவேற்றவர் பாலசுப்பிரமணிய ஐயர். அறிக்கை படித்தவர் நாகராஜ ராவ், வாழ்த்துக் கூறியவர் வி. கே. திருவேங்கடாச்சாரி, தலைமை வகித்தவர் எஸ். வரதாச் சாரி. வந்தனோபசாரம் கூறியவர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்.

இந்த அரிய திட்டத்தைக் கனம் இராசகோபாலாச்சாரியார் தனது ஆதரவில் கொண்டு வந்தாலும் வரலாம்!

மத்திய அரசாங்கத்தில் மந்திரி பதவி வகிக்கு மளவுக்கு உயர்ந்து விளங்கும் காங்கிரஸ்காரர் களுக்கே புரியவில்லை. கும்பகோணம் கல்லூரி விழாவில் கலந்துகொண்ட, மத்திய அரசாங் கத்துத் தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச் சாரி அவர்கள் இப்பொழுது வந்துள்ள புதிய கல்வித்திட்டத்தைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "இதுவரை பொறுப்பும் நம்பிக்கையும் உடைய உயர்தர நிலைகளுக்கு நம்மைப் பண்படுத்தி, உதவிய கல்விமுறை, இனிமேல் வருபவர்களுக்கு நல்லதல்லவென்று எப்படிச் சொல்லுகிறார்கள் என்று, என்னால் நினைக்கமுடியவில்லை. ஏதாவது ஒரு சிறு தொழிலைக் கற்றுக்கொள்வது நல்லதுதான்; ஆனால் அதற்காக இப்பொழுது முயற்சிக்கப் படுவதுபோல, கல்விமுறையின் முழு அமைப் பையுமே மாற்றிவிடத் திட்டமிடுவது நல்ல தல்ல. அது கடைசியில் கல்வி என்பது ஒன்று இல்லாமலே செய்துவிடும்...சில பெரிய மனி தர்கள் நினைப்பதுபோல, இந்தப் புதிய கல்வித் திட்டமெனும் ஆராய்ச்சியில் நல்ல முடிவுகள் கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை. மாண வர்களின் கல்வியைச் சீர்குலையச் செய்வதற்கு எத்தகைய நல்ல காரணமும் இருக்கமுடியா தென்று நான் நிச்சயமாகக் கூறுகிறேன்."

சென்னை முதல் மந்திரி கொண்டுவந்த "அபூர்வ" திட்டத்திற்கு, மத்திய அரசாங்கத் துத் தொழில் மந்திரி தரும் மதிப்புரை இது வாகும். கனம் ராஜகோபாலாச்சாரி கொண்டு வந்த திட்டம் கனம் கிருஷ்ணமாச்சாரிக்கே புரியவில்லை, தவறாகப்படுகிறது!

வர்ணாச்சிரமத்தை நிலைநாட்டுவதற்கு, வட நாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தைப் பரப்புவ தற்குப், புதுப்புதுக்கல்வித்திட்டங்கள் போடப் படுகின்றன. சிறிதளவு உயர்ந்து வந்த கல்வி வளர்ச்சியை அவை அழித்துவிட்டு, கடைசி யில் கல்வியென்றாலே இன்னதென்று தெரியாத அளவுக்கு நாட்டு மக்களைக், கொண்டுவந்து விடும்போலிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் கல்விமுறை அலங்கோலப்படுத்தப்பட்டு விட்டது!

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் குறிப்பிட்டதைப் போல, அறிவுக்கொவ்வாத கோட்பாடு, ஆவே சம், விசித்திர மனப்போக்கு இவைகளின், பயங்கரப் பிடியில், நம்நாட்டுச் சிறுவர்களின் எதிர்காலம் சிக்கியிருக்கிறது. உடலமைப்புத் தெரியாதவன் ரண சிகிச்சை செய்வதுபோல, கல்வியின் நோக்கம், மக்களின் பண்பாடு இவை களை உணராதவர்கள் நம் நாட்டின் கல்வித் திட்டத்தைத் தீட்டுகின்றனர். அந்த ஆராய்ச் சிக்குப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பலிதரப்படுகின்றனர்.

சிறுகதை

ஆறு மாதங்கள்!

[இரா. செழியன்]

நோயாளியின் அறையை விட்டு டாக்டர் வெளியே வந்தார். அப்பொழுதுதான் நர்சிங் ஹோமிற்குள் நுழைந்த மனோகரன் அவர்முன் நின்றான்.

"நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாளைக் காலை வந்து பார்க்கிறேன்."

"டாக்டர்! இதுவரைப் பார்த்ததிலிருந்தே உங்களுக்குத் தெரிந்திருக்குமே. இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே இவைகளெல்லாம் பார்த்ததில் எப்படியிருக்கிறது?" என்று மனோகரன் கேட்டான். தன் மனைவி தங்கத்துக்கு ஏற்பட்ட நோயை மற்ற டாக்டர்களால் தீர்க்கமுடியாது கைவிட்ட நிலையில், பிரபல டாக்டரின் பரிசோதனைக்கு அழைத்துவந்தான்.

"கவனிக்கப்படாது மிகவும் முதிர்ந்த நிலையில் அது இருக்கிறது. இரண்டு வருஷத்துக்கு முன்பே இங்கு வந்திருந்தால் பூரண குணப்படுத்தி அனுப்பியிருப்பேன். இப்பொழுது இருக்கும் நிலை..."

"டாக்டர்! உண்மையான நிலையைச் சொல்லிவிடுங்கள். குணமாகி, அவள் பழைய நிலைக்கு வரமுடியுமா? அதற்குத்தகுந்த மருந்து ஏதாவது..."

"குணப்படுத்திவிடுவதென்பது கிடையாது. ஆரம்ப நிலையில், நோய் முதிராமல் அப்படியே நிறுத்தியிருக்கலாம்."

இந்தப் பாடத்தை மனோகரன் ஒவ்வொரு டாக்டரிடமும் கேட்டு அலுத்துப்போயிருந்தான். டாக்டர்களையும் குறைகூறமுடியாது. மருந்து கொடுக்கமுடியுமேயொழிய, அவர்களால் அதிசயங்களை நிகழ்த்த முடியுமா?

"டாக்டர்! கடைசியாக ஒன்று. இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவள் உயிரோடிருப்பாள்?"

"மிகக் கடுமையான கேள்வியாயிற்றே!" என்று டாக்டர் அதைத் தள்ளிவிட முயன்றார்.

"நீங்கள் சொல்லவேண்டாம். நானே சொல்லிவிடுகிறேன். இதற்கு முன்னதாகப் பார்த்த டாக்டர், இன்னும் ஆறுமாதத்திற்குமேல் தாங்காது என்று சொன்னார்."

"ஆமாம்! என்ன செய்வது?" என்று டாக்டர் வருத்தத்துடன் ஒப்புக்கொண்டார். மனோகரன் அங்குபோடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்துவிட்டான். "இவற்றையெல்லாம் நோயாளியிடம் கூறி, கலவரமடையும்படிச் செய்துவிடாதீர்கள்! இன்னும் மிக மோசமான நிலையில் ஆயிரக்கணக்கான கேஸ்கள் வருகின்றன. இன்னும் ஒரு வாரத்தில், ஒரு நாளில், ஒரு மணி நேரத்தில்கூட, போய்விடக்கூடிய வாழ்வுகள்! இருந்தாலும் அப்பொழுதுகூட, நம்பிக்கை யிழக்கும் விதத்தில் எதுவும் சொல்லக்கூடாது. பிழைத்து விடுவோம் என்ற நம்பிக்கையே சிலசமயங்களில் அவர்களுக்கு மருந்தினால் செய்யமுடியாததைச் செய்து—நீண்டநாட்கள் உயிர்வாழச் செய்துவிடுகிறது. ஆதலால் உள்ளத்தில் நம்பிக்கையும், குதூகலமும் குறையும் விதத்தில் எதுவும் சொல்லக்கூடாது." டாக்டர் தன் நெற்றியைத் தடவிக்கொண்டார். நெற்றியிலிருந்த சுருக்கங்கள் விலகி மீண்டும் மூடிக்கொண்டன.

"பின், நான் இன்று அவளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்."

"எப்பொழுதாவது, மயக்கம் அல்லது வலி திடீரென்று வந்தால் என்னிடம் காட்டுங்கள். இப்பொழுதுள்ள மருந்தையேச் சாப்பிட்டுக்கொண்டுவரலாம்." என்று டாக்டர் சொன்னார். மனோகரன் அவருக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டு, வேறு ஏதோ சில பேசினான். டாக்டர் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு மாடிப் படிக்கட்டுகளில் கீழே இறங்கிச் சென்றுகொண்டிருந்தார். பெருமூச்

செறிந்த வண்ணம் மனோகரன் உட்கார்ந்திருந்தான். தங்கம் இன்னும் ஆறுமாதந்தான் உயிரோடிருக்கக்கூடும்! அதை நினைக்கவே பயமாயிருந்தது, ஏற்றுக்கொள்ள மனம் கூசியது.

மனோகரன் உள்ளே போனபொழுது, தங்கம் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் மனோகரனின் வேதனை அதிகரித்தது. தங்கத்தை அவன் உள்ளன்புடன் காதலித்தான். இருந்தாலும் அவனுடைய காதல் மட்டும் அவளுடைய வாழ்வை இன்பமானதாக்க முடியவில்லை தங்கம் மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டவள், வாழ்க்கையைப் பற்றியோ, எதிர்காலத்தைப்பற்றியோ அவள் என்றைக்கும் கவலைப்பட்டிருக்க முடியாது. ஆனால் மனோகரனோ ஏழ்மையால் தீண்டப்பட்டு, வாழ்க்கையின் கரடுமுரடான பாதையில் காலிடறி நின்றவன். மனோகரனை மணந்துகொண்ட காரணத்தால், தங்கமும் அந்த இன்னல் பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டியிருந்தது. முன்போல தான் விரும்பியதை யெல்லாம் தங்கத்தால் அடைய முடிவதில்லை. தன் மனைவி கேட்பதை வாங்கித் தரவேண்டுமென்ற ஆவல் மனோகரனுக்கு இருந்தபோதிலும், அவனுடைய செல்வ நிலை அதை ஏற்றுக்கொள்வதில்லை. அதை வெளிப்படையாகச் சொல்லிவிடவும் மனோகரனுக்குத் துணிவு கிடையாது. அதனால் அவள் எது கேட்டாலும், "அடுத்தமாதம் ஆகட்டும்", "பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று ஒத்திப் போட்டுவந்தான். இதனால் தங்கம் மீண்டும் ஞாபகப்படுத்துவதும், கேலி பேசுவதும், கண்ணைக் கசக்குவதும், சிறு குழந்தையைப் போலக் கோபப்படுவதுமாக இருந்தாள். இதனால் மனோகரனை மணந்ததற்கு வருந்தியதோ, அவனை உள்ளன்புடன் காதலித்ததில் அவள் குறைந்ததோ கிடையாது. ஆனாலும் தங்கம் தன்னை மணந்ததால் இடர்ப்படுகிறாள் என்ற எண்ணம் மனோகரனை அடிக்கடி வாட்டியது. அந்த நிலையில்தான் நன்றாக இருந்த தங்கத்திற்கு உடல் பலவீனமடைந்து, திடீரென்று மயக்கம் வருவதும், முகம் வெளுத்து விடுவதுமாக ஆயிற்று. அதற்கு அவன் பார்க்காத டாக்டர், கொடுக்காத மருந்து இல்லையென்று சொல்லலாம். சில சமயங்களில் முழுவதும் குணமடைந்ததுபோலத் தோன்றினாலும் பின் திடீரென்று முன்னைய நலிவுகள் வந்தன. கடைசியாக அவளைப்பார்த்த ஒரு டாக்டர், கல்லீரலில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டதாகவும், அது மிகவும் ஆபத்தானதென்றும் கூறினார். அதற்குப் பின்தான் தங்கத்தைப் பிடித்துள்ள நோயின் கொடுமை தெரிந்தது. அதற்குப்பின், செலவைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், மிகச்சிறந்த டாக்டர் ஒருவரிடம் அழைத்துச்சென்று, நோயின் தன்மையைப் பரிசோதிக்கச் செய்தான். அதன் முடிவுதான் "இன்னும் ஆறுமாதம்!" என்ற தீர்ப்பு. ஐயோகோ! வேதனை தாங்காமல் மனோகரன் துடித்தான். அதிலும் தனக்குற்ற நோயின் கொடுமையை அறியாமல், தங்கம் பொழுது போக்காக உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் மனோகரனின் சோகம் இன்னும் அதிகமானது. முகமலர்ச்சியுடன் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, தங்கம் சாய்ந்து உட்கார்ந்தாள். புத்தகத்தில் வந்ததைப்பற்றி இன்னும் நினைத்துக்கொண்டு, அவள் உட்கார்ந்திருக்கிறாள், முடியப்போகும் அவளுடைய வாழ்வின் கடைசி அத்தியாயத்தைச் சரியாக உணராமல்.

தங்கம் திரும்பிப் பார்த்தபொழுது, மனோகரன் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

"இன்னும் நீங்கள் சாப்பிடப்போகவில்லையா? மணி பன்னிரெண்டுக்குமேலாகிறதே!" என்று அவள் கேட்டாள். வழக்கமாக அந்த நேரத்துக்கு மனோகரன் வீட்டுக்குப்போய், தன் தங்கை, அல்லது அம்மா யாராவது ஒருவரை அனுப்பிவைப்பான்.

"உன்னை அழைத்துக்கொண்டு போகலாம் என்று டாக்டர் சொன்னார்."

"அப்படியா! எப்போது இந்த இடத்தை விட்டுப் போகலாம் என்று எனக்கும் இருந்தது. இதோ, பாருங்கள்! இரண்டுமூன்று நாளாக இரத்தம் எடுக்கிறேனென்று, என் விரலை ஊசியால் குடைந்துவிட்டார்கள். சரி! டாக்டர் உங்களிடம் என்ன சொன்னார்? ஏதாவது நம்பிக்கையுடன்..."

"சே! சே! அப்படி யொன்றும் கிடையாது. கொஞ்சங்கூட பயப்படவேண்டாமென்றார். இன்னும் ஆறு மாதத்திற்கெல்லாம்...." வாய் தவறி வந்த அந்தச் சொற்கள் மனோகரனுக்குத் திகைப்பைத் தந்தன.

"ஆறுமாதத்திற்கெல்லாம்?" என்று தங்கம் ஆவலுடன் கேட்டாள்.

"நோய் தீர்ந்து, பூரண குணமடைந்து விடும்." தங்கத்தின் முகத்தைப் பார்க்காமல், மனோகரன் சொன்னான்.

"எனக்கு அப்பொழுதே தெரியும். இதில் ஒன்றுமில்லையென்று. நீங்கள்தான் வீணாகப் பயந்துகொண்டு இங்கே அழைத்துவந்தீர்கள். இன்றைக்குக் காலையில் வந்த நர்ஸ்கூட, 'உங்களுக்கென்னம்மா! குற்றுயிரும் குலையுயிருமாக இங்கே வந்தவர்கள்கூட நன்றாகக் குணமடைந்து போயிருக்கிறார்கள். இந்தப் பெரிய டாக்டர் பார்த்தால்போதும், போன உயிர்கூட திரும்பி வந்துவிடும்.' என்று சொன்னாள். அதே போலத்தான் ஆகியிருக்கிறது. இனி மேலாவது, டாக்டர், ஆஸ்பத்திரி, மருந்து என்று தொந்தரவு செய்யாமலிருப்பீர்களல்லவா?" என்று தங்கம் சிரித்துக்கொண்டாள், மனோகரன் ஏதும் பதில்தரவில்லை. பேசாமல் அங்கிருந்த சாமான்களை ஒழுங்குசெய்து, கட்டவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு, தங்கத்தை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

வீட்டிற்குச் சென்றதும், மற்றவர்களிடம் "தங்கத்திற்கு உடம்பு சீக்கிரத்தில் குணமாகிவிடும். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்று மனோகரன் சொல்லிவைத்தான். அதை ஏற்று எல்லோரும், பயம் நீங்கி, ஆறுதலடைந்தனர். மற்றெல்லோரையும்விட கவலையற்று விளங்கியது தங்கம்தான். நோய் ஆரம்பநிலையில், எதற்கெடுத்தாலும் கோபப்பட்டு, எரிந்து விழுந்துகொண்டிருந்த தங்கம், இப்பொழுது நோய் நீங்கிவிடும் என்றதும் பேச்சில் முற்றிலும் மாறுதலடைந்து, எல்லோரிடமும் அன்புடனும், நேசத்துடனும் பழக ஆரம்பித்தாள். தங்கமென்றால், சிறிது பேசுவதற்கு, என்னவேண்டுமென்று கேட்பதற்குக்கூட பயப்படும் மற்றவர்கள், அவளிடமேற்பட்ட மாறுதலைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். கடுமையான சிறையினின்றும் விடுபட்டவளைப்போல, தங்கமும் குதூகலத்துடனும், கலக்கமற்றும் இருந்தாள். பிழைத்துவிட்டோம் என்ற நம்பிக்கையே அவளைப் பொலிவுறச் செய்துள்ளது என்பது மனோகரனுக்குத் தெரியும். அந்த நம்பிக்கையில் அவளுடைய உடல்நலம்கூட முன்னிலும் மேம்பாடடைந்துவந்தது. முன்போல, தலைவலி, மார்பில் வலி, கண் மயக்கம், சோர்வு என்று எதுவும் அவள் குறை சொல்வதில்லை. அவள் நிலைகண்டு, ஒரோவழி மனோகரன் மகிழ்ச்சியெய்துவான், ஆனால் மறுகணம், "இன்னும் ஆறுமாதம்!" என்ற நோயின் கடும் தீர்ப்பு அவன் சோகத்தைக் கிளறிவிடும். ஆனால் தனக்குத் தெரிந்ததை அவன் யாரிடம் சொல்லி ஆறுதல் பெறமுடியும்? தங்கத்தைப் பார்க்கவந்தவர்கள், "தங்கம் எப்படி மாறிவிட்டாள்! இப்பொழுது உடலில் மட்டுமல்ல உள்ளம்கூட சிறந்திருக்கிறது. முன்பு ஏறெடுத்துக்கூட யாரையும் பார்க்காதவள். இப்பொழுது பரபரப்புடன் வரவேற்றுப் பேசுகிறாள், ஓடியாடி உதவுகிறாள்!" என்று பேசிக் கொண்டார்கள். தங்கத்தின் மாமியாரும், "தங்கமென்றால் தங்கம்தான்!" என்று போற்றிப் புகழ ஆரம்பித்தாள். ஒருமாமியாரிடம் ஒரு மருமகள் புகழுரை பெறுவதென்றால், அதற்கு மருமகள் எவ்வளவு பண்பு மிக்கவளாகவும், திறமைசாலியாகவும் இருக்கவேண்டும்!

முன்போலல்லாமல், எப்பாடுபட்டேனும் அவளுக்கு வேண்டியதை—அது பட்டுச் சேலையோ, தங்க நகையோ-எடுத்துத்தர மனோகரன் முயற்சிப்பான். அது தெரிந்தால் தங்கம் கோபித்துக்கொண்டு, "இப்பொழுது எதற்கு? எல்லாம் அடுத்த பொங்கலுக்கு எடுத்தால் போதும்!" "இன்னும் இரண்டுவருஷமாகட்டும்" என்று தடுத்துவிடுவாள். அடுத்த பொங்கல், இன்னும் இரண்டு வருஷங்கழித்து—தங்கத்திற்குத் தன் எதிர்காலத்தைப் பற்றி எந்தவிதக் கவலையுமின்றி அவள் இருக்கிறாள், ஆனால் மனோகரனுக்குத் தகுந்த காரணம் சொல்லமுடியாமல் திகைத்து இருப்பான்.

முழு அமைதியும், நன்றாக ஓய்வும் இருக்கட்டுமென்று, தங்கத்தை அவளுடைய கிராமத்திற்கு மனோகரன் அழைத்துச் சென்றான். அங்கு இருந்த வீட்டில் தங்கத்தின் தாயும் தம்பியும் மட்டும் தனியாக இருந்தார்கள். அதன் பின்னால் இருந்த பெரிய தோட்டத்தில், கவலையற்றுத் திரிந்துவந்த தங்கத்தைப் பார்ப்பவர்கள், அவளுக்கு எத்தகைய வியாதியும் இதற்குமுன் இருந்திருக்க முடியுமென்று கூறத் தயங்குவார்கள். அவள் பேசுவதையும், சிரிப்பதையும் கேட்கும்போதெல்லாம், மனோகரனுக்கு ஒருவகை நடுக்கம் உண்டாகும். மலர்ந்த முல்லை மலரைப் பார்க்கும்பொழுது

அது இன்னும் சிறிதுநேரத்தில் வாடிவிடும், என்ற எண்ணம் பிறந்தால், அதிலும் அந்தக் கொடியில் பூத்தது அந்த ஒரே ஒரு மலர்தான் என்றால், மலரையும் மணத்தையும் பார்க்கும் பொழுது அது வாடிவிடும் என்ற எண்ணம் ஒரு களங்கத்தைத் தரும். ஆனால் மலரோ தும் கவலையுறுவதில்லை. கொடியில் தொங்கி, தென்றலில் அசைந்து, சிரித்தபடிதான் இருக்கும். அதுபோல தனக்கு அருகாமையில் இருக்கும் நீண்ட இருளைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் தங்கம் நிலவொளியில் ஆடிப்பாடிக்கொண்டிருக்கிறாள். ஆனால் பக்கத்திலிருக்கும் மனோகரனுக்கு அது தெரிகிறது. ஆனால் எப்படிச் சொல்வது? சொன்னாலும் அதனால் என்ன பலன்?

விஷங்கலந்த பாலை ஒருவன் பருகப்போகும் பொழுது, அவன் பக்கத்தில் கைகால் முடங்கிக்கிடக்கும் ஊமையன் நேரவிருக்கும் எதிர்பாராத விளைவைப்பற்றிச் சொல்லி எப்படித் தடுக்கமுடியும்?

சில சமயங்களில் தங்கம் போடும் திட்டங்கள் மனோகரனின் இதயத்தைச் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோலிருக்கும்.

"அத்தான்! வாருங்கள், தோட்டத்துக்குப் போகலாம்."

"அங்கு என்ன, இந்த வெய்யலில்?"

"தென்னம் பிள்ளைகள் போடுகிறார்கள். போய்ப் பார்க்கலாம்."

"எது போட்டால் உனக்கென்ன? பேசாமல் படுத்து, கொஞ்சநேரம் ஓய்வாக இரு!"

"இல்லை, இல்லை! போய்ப் பார்க்கலாம். நாம் இடம் சொல்லாவிட்டால், தாறுமாறாகப் புதைத்துவிடுவார்கள், அப்புறம் வளர்ந்தபின் பார்க்க வரிசையாக இருக்காது!" என்று தங்கம் அடுக்கிக்கொண்டே போனாள். "அந்த இடத்தில் போட்டதும், இன்னும் ஐந்தாறு வருஷத்தில் நல்ல சோலையாகிவிடும். பார்க்க நன்றாயிருக்கும்."

ஐந்தாறு வருஷங்கள்! தங்கம் பேசுவது அவனுடைய நெஞ்சில் நெருப்பையிட்டுப் பிசைவதுபோலிருந்தது. "டாக்டர் சொல்லியபடி ஐந்தாறு மாதங்களுக்குமேல் நீ இருக்கப்போவதில்லை. ஐந்தாறு வருஷங்களென்று திட்டம் போடாதே!" என்று கூறிவிடலாமாவென்று அவனுக்குத் தோன்றியது. அவளோ, நோயின் கொடுமையிலிருந்து விடுபட்டுவிட்டோமென்று ஆரவாரத்துடன் பேசுகிறாள், அவளிடம் என்ன சொல்வது? ஏன் அந்த உண்மையைத் தெரிந்துகொண்டோமென்று மனோகரனுக்குத் தோன்றியது. டாக்டரிடம் ஏன் அவ்வளவு வற்புறுத்தி அந்த வேதனையைப் பெற்றுக்கொண்டோம்? அவர்தான் ஏன் சொன்னார்? மற்றவர்களிடம் அவன் இப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பது போல, அவனிடமும் டாக்டர் சொல்லியிருந்தால் இந்தத்தொல்லை—வேதனை ஒன்றும் வந்திராது. அவனும், தங்கத்தைப் போல மனமகிழ்ச்சியுடன் இருந்திருப்பான்.

டாக்டர் சொன்னதிலிருந்து மூன்று மாதங்கள் உருண்டோடிவிட்டன. மனோகரனின் முகம் அடிக்கடி வாட்டமடைந்தது. அவன் சோகத்துடன் உட்கார்ந்திருப்பதைத் தங்கம் பார்த்துவிட்டால் போதும், உடனே கவலையுடன் அருகில் வந்துவிடுவாள். நெற்றியில் கையை வைத்து, "ஏன் தலை வலிக்கிறதா?" என்று கேட்பாள்.

"ஒன்றுமில்லை, பேசாமல் உட்கார்ந்திருக்கிறேன்."

"பின் ஏன் கப்பல் ஏதோ முழுகிப்போனது போலக் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். பொழுதுபோகவில்லையா? சரி வாருங்கள்! பக்கத்துக் கரும்புத்தோட்டத்தில், சர்க்கரை காய்ச்சுகிறார்களாம். வாருங்கள் போய் வேடிக்கை பார்க்கலாம்!" என்று கையைப்பிடித்து, அழைத்துப்போவாள்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0—5—0

அட்டைப்பட விளக்கம் :

உண்மையை நிலைநாட்டும் உறுதி

மக்களின் குருட்டு நம்பிக்கையிலும், மடமைப் போக்கிலும் காலூன்றி நின்ற காலம் வரையிலும், மதம், ஐரோப்பாக் கண்டத்தில், கொக்கரித்தது; கும்மாளம் அடித்தது! குருமார்கள் கோலோச்சினர்! மன்னர்களும் மக்களும் மாதாகோயில் முன்பு மண்டியிட்டுக் கிடந்தனர்!

அறிவியல் வளர்ச்சியும், பகுத்தறிந்து நோக்கும் பண்பும் வளர்ந்த பிறகு, மதத்தின ஆதிக்கம் குலைந்தது; செருக்கு அழிந்தது; சிறப்பு மங்கிற்று!

ஏசு தம்காலத்தில், தம் சூழ்நிலையில் காணப்பட்ட கொடுமைகளையும், தொல்லைகளையும், தீமைகளையும் கண்டு, மனங்கலங்கி, அவைகளைக் களைந்து, மக்கள் இன்பவாழ்வு வாழ்வதற்கான வழிமுறைகளைப் போதித்தார். அவர் போதித்தவைகளில் சில நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபட்டுக் காணும் தன்மையனவாகக் காணப்படினும், சில மக்கட் சமுதாயத்திற்கு எக்காலத்துக்கும் பொதுத்தன்மை வாய்ந்தனவாகும். அத்தகைய கொள்கைகளை மக்களிடையே பரப்பினால், மக்கட் சமுதாயம் முழுவதும் அக்கொள்கைளால் ஏற்றமும், வளர்ச்சியும் பெறுமேயானால், மக்கள் வாழ்வில் வளமும் இன்பமும் பெருகும் என்று கருதி. சிலர், கிருத்துவின் கருத்துக்களைப் போதனை புரிய ஆரம்பித்ததில் தவறில்லை. ஆனால், கிருத்துவின் கொள்கைகளைப் போதித்தவர்கள், அந்தக் கொள்கைகளை ஏற்று நடப்போரின் எண்ணிக்கை பெருகவேண்டும் என்பதில் கொண்டிருந்த ஆவல், நாளடைவில், கிருத்தவ மதத்தின் பெருமையைப் பேசிடுவோரின் எண்ணிக்கை பெருகவேண்டும் என்பதில் மாறிற்று. பின்னும் சிலகாலத்தில், கிருத்துவின் கொள்கையை மக்களிடையே பரப்பவேண்டியதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டியவர்கள், யார் யார் கிருத்துவமதக் கட்டளைகளை ஏற்க மறுக்கிறார்கள், யார் யார் கருத்தில் மாறுபடுகிறார்கள், அவர்களைப் பிடி, அடி, உதை, சிறையில்தள்ளு, சித்ரவதை செய், வெட்டிப்போடு, நெருப்பில் வாட்டு என்ற 'திருப்பணிகளைச்' செய்ய ஆரம்பித்தார்கள். "ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டு" என்று சொல்லிய ஏசுவின் பொன்மொழியை ஏற்றுக்கொண்ட மதக்குருமார்கள், அதனைக் காற்றிலே பறக்கவிட்டுக், கருத்தில் மாறுபட்டோரை மதநிந்தகர் என்றும், கடவுள் வெறுப்பாளர் என்றும், நாத்திகர் என்றும் குற்றஞ்சாட்டி, நெருப்புக் குண்டத்திலே தள்ளிச் சுட்டுப் பொசுக்கினர். எல்லாவற்றையும் அன்பின் பேரால்தான் செய்தனர்!

அறிவுவளர்ச்சியைத் தடைசெய்ய, இடைக்காலங்களில், ஐரோப்பாவில் நிலவிய மதவெறி எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்! மதம் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும், அறிவியல் கருத்துக்கள், பல கொடுமைகளுக்குப் பிறகும் வளரத்தான் செய்தன! ஐரோப்பாக் கண்டத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தில், மதச் சீர்திருத்தம் முக்கியமான ஒரு பகுதியாகும். சீர்திருத்தம் வேண்டிய அளவுக்கு, ரோமன் கத்தோலிக்க மதத்தில் ஊழல்களும், உடைசல்களும் நிரம்பிக் கிடந்தன. கத்தோலிக்க மதத்தின் போக்கை எதிர்த்துப் பல சீர்திருத்தக்காரர்கள் தோன்றினார்கள். அவர்களிலே முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஜான் விக்ளிப், ஜான் ஹஸ். மார்டின்லூதர், கால்வின் போன்றவராவார்கள். அவர்களைப்

பொருள்களாக, ஆங்காங்கு, கண்காட்சிக்கும், பக்தி வழிபாட்டிற்கும் வைத்தனர். பேய், பூதம், பிசாசு ஆகியவற்றினின்றும் மக்களையும், ஆடுமாடுகளையும், பயிர்ப்பச்சைகளையும், காடு மேடுகளையும் காப்பாற்றிக் கொடுக்கும 'சர்வ வல்லமை' மாதாகோயிலுக்கு உண்டு என்ற நம்பிக்கையைப், பாதிரிமார்கள், நாடெங்கணும் பரப்பியிருந்தனர். அதன் காரணமாக முதலில் ஆன அறுவடை, முதலில் பழுத்த ஆப்பிள், முதலில் போட்ட முட்டை, முதலில் பிறந்த கன்று ஆகியவைகளைக் கோயில்களுக்குக்காணிக்கையாக்கித், தம்மைக் காப்பாற்றிக்கொள்ள, மக்கள் பெரிதும் பாடுபட்டனர். இவற்றாலும் மாதாகோயில்களுக்குப் பெரும் பொருள் சேர்ந்தது.

சில வேளைகளில், ஏசுபெருமான் உயிரோடு காட்சியளிப்பார், ஆண்டவன் பீடத்தில் ஆடு தோன்றும், ஒயினும் ரொட்டியும் ஏசுநாதராக மாறும், அன்னை மேரி அருள்பாலிப்பாள் என்பன போன்ற அதிசயக்காட்சிகள் தோன்றப் போவதாக நேரமும், இடமும் குறித்துப், பெருந்திரளான மக்களைத் திரட்டிக், காணிக்கைப் பொருள்கள் பல பெற்றுக்கொண்டு, பின்னர் ஏதேனும் சமாதானம் சொல்லிப் போகச்சொல்வர்.

கிளைச் சர்ச்சுகளில், போதகரையோ, சாமியாரையோ நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதெல்லாம், அறிவு ஆற்றல், பண்பு ஒழுக்கம் ஆகியவைபற்றிக் கவலைப்படாமல், யார் அதிகப் பணம் பெரிய மடாதிபதிக்குக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே அந்தப் பதவிகள் அளிக்கப்பட்டன. ஒருவருக்கு ஒரு பதவி கொடுக்கப்பட்டு முடிந்தபிறகு, வேறொருவர் அதே பதவிக்கு ஆசைப்பட்டு, முதல்வரைக் காட்டிலும் அதிகப்பணம் கொடுக்க முன்வந்தால், முதலில் நியமிக்கப்பட்டவரைத் தள்ளிவிட்டு, இரண்டாமவரை நியமிக்க மடாதிபதிகள் சிறிதும் தயங்குவதில்லை.

இவைகளைத் தவிர, ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள், பாதிரிமார்களிடையே மிகவும் மலிந்து காணப்பட்டன. போப் பதவிக்கு ஏற்பட்ட போட்டாபோட்டிகள், ஒரு போப்பை மற்றொரு போப் துரத்தியடிப்பது, சிறையில் தள்ளுவது, பாதிரிமார்கள் அக்கிரமம் புரிவது, ஆகாத செயல் செய்வது, பணம் பிடுங்குவது, பாமரரை ஏமாற்றுவது போன்ற நிகழ்ச்சிகளும் எங்கும் தலைவிரித்தாடின.

இவை யெல்லாவற்றையும் கண்ட மக்கள் கொதிப்படைந்திருந்தார்கள் என்றாலும், அவற்றை எதிர்த்துக் கூற எவரும் துணியவில்லை. கடவுள் நம்பிக்கையும், மதநம்பிக்கையும் கொண்ட பலரும் இத்தகைய செயல்கள் கோயில்களிலும், மடாலயங்களிலும் நிகழ்வதைக் கண்டு வெறுப்படையத்தான் செய்தார்கள். குருமாரின் சாபம் எங்கு குறுக்கிடுமோ, ஆண்டவன் எவ்வகையில் தண்டிப்பாரோ என்று அஞ்சி, ஆமைகளாகக் கிடந்தனர். குமுறும் எரிமலை என்றேனும் ஒருநாள் வெடித்துவிடுவதுபோல, கத்தோலிக்கக்கோயில்களின் கொடுமையை எதிர்த்துக் கூறச் சிலர் தலைப்பட்டார்கள்; மக்களின் பலத்தைத் தங்கள் பக்கம் சேர்க்கவும் முயன்றார்கள்.

தங்களுக்கு எதிர்ப்பு தோன்றுவதைக்கண்ட குருமார்களும், தங்கள் ஆதிக்க வலிவைக் கொண்டு அதனை அடக்கவும், அதில் ஈடுபட்டோரை அழிக்கவும் ஆங்காங்கு முயற்சிசெய்யாமலிருக்கவில்லை. என்றாலும் எதிர்ப்பு ஆங்காங்கு வெடித்துக் கிளம்பத்தொடங்கிற்று.

இங்கிலாந்தில் ஜான் விக்ளிப் என்பார் பைபிளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்துக் கூறிப், போப்பாண்டவரின் செயல்கள் எப்படி ஏசுவின் கொள்கைகளுக்கு மாறுபட்டனவாகும் என்று விளக்கினார். பணம் வாங்கிக் கொண்டு பாபத்தை மன்னித்தல், பாபமன்னிப்புச் சீட்டு விற்றல், பதவிகளைப் பணத்திற்கு ஏலம்விடுதல், புனிதர்களை வணங்குதல், விக்ரகங்களைக் கும்பிடுதல், அதிசயப் பொருள்களை வழிபடுதல், ஸ்தல யாத்திரை போகுதல் முதலிய பண்புகள் ஏசுவின் கொள்கைகளுக்கு நேர் மாறானவை என்று போதிக்கத் தொடங்கினார். அவருக்கு ஆதரவு பெருகியது. கற்றறிந்தோரும், இளைஞரும் அவர்பக்கம் நின்றனர். பல இளைஞர்களைத் தயாரித்து நாடெங்கும் பிரச்சாரத்துக்கு அனுப்பினார். மக்களிடம் போதனை புரியச் சென்ற ஏசுவின் சீடர்கள் பொன்னைப் பெற்றோ வெள்ளியை ஏந்தியோ, தடியைத் தாங்கியோ தட்சிணை பெற்றோ செய்யவில்லை; அவர்கள் ஏதுமற்ற ஏழைகளாய்த், துறவிகளாய்த்தாம் போதனை புரிந்தனர் என்பதை விளக்கினார். விக்ளிப்பின் போக்குப், போப்பாண்டவரின் சினத்தைத்

பின்பற்றி மக்களும் ஆங்காங்கே கொதித்து எழுந்தனர். எந்தக் கொள்கைகளையும், திட்டங்களையும், ஆதிக்கத்தையும் அசைக்கமுடியாதவை என்று ரோமன் கத்தோலிக்கர்கள் எண்ணியிருந்தனரோ, அவைகளை ஆட்டி, அசைத்து, அழித்துக்காட்டினார்கள், துணிந்து கிளம்பிய சீர்திருத்தக்காரர்கள்.

ஏசுவின் சீடர்களிலே ஒருவரான செயின்ட் பீட்டர், வாழ்ந்து போதனை புரிந்த இடமான ரோம் நகரமே, அந்த நாட்களில் மதத்தின் தலைமையிடமாகக் காட்சியளித்தது. தலைமை மடாதிபதியான போப் அங்கு பேரரசர்போல் வீற்றிருந்து, ஐரோப்பாவின் பல பகுதிகளிலுமுள்ள மாதாகோயில்களையும், மத போதகர்களையும் கண்காணித்துவந்தார். பெரும்பாலான மடத்துச் சாமியார்களும், குருமார்களும் கோலாகலமான வாழ்வை நடத்துவதிலும், போக போக்கியங்களை நுகர்வதிலும், ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் நிலைநாட்டுவதிலும், சொந்தச் செல்வாக்கைத் திரட்டுவதிலும், பெரும்பணம் சேர்ப்பதிலும் தங்கள் நேரத்தையும், நினைப்பையும் செலவிட்டுவந்தனர். ரோம் நகரிலிருந்த போப்பின் நிலைமையைக் குறிப்பிட வந்த இடைக்கால ஆசிரியர் ஒருவர், "பீட்டரின் பிரதிநிதிகளும், அவர்களைச் சார்ந்தோரும் பிளேட்டோவையும் அறியமாட்டார்கள்; வர்ஜிலையும் தெரியமாட்டார்கள். வேறு எந்தத் தத்துவக்கலைஞனையும் அவர்கள் உணரமாட்டார்கள். போப் எதையும் அறியமாட்டார்; அப்படியிருந்தும் சுவர்க்கத்தின் வாயில்காப்போராக வந்துவிடுகிறார்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

பாதிரிமார்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியவைகளைப் போக்க வேண்டியதன் அவசியத்தை, வழிபாட்டிற்கு வரும் மக்களிடையே போதிப்பார்கள்; அதே நிலையில், அவைகளை ஆண்டவன் பேரால் நிறைவேற்றிக்கொள்ள முயலுவார்கள்.

பாபமன்னிப்புச் சீட்டுகளின் விற்பனை, போப்பாண்டவருக்கும், பாதிரிமார்களுக்கும் பெரும் வருமானத்தைத்தந்தது. சிறிய பெரிய பாவங்களுக்குச் சிறிய பெரிய தொகை என்று விகிதங்கள் விதிக்கப்பட்டு,போப்பாண்டவரின், கையெழுத்தும், முத்திரையும் இடப்பட்டு,பாபமன்னிப்புச் சீட்டுகள் பாபம்பண்ணினோர்க்கு வழங்கப்பட்டன. குறிப்பிட்ட பாவத்திற்கான குறிப்பிட்ட தொகையைப், பாபமன்னிப்புச் சீட்டை வாங்குவதன் மூலம், மாதாகோயிலுக்குச் செலுத்திவிட்டால், பாபங்கள் அனைத்தும் அகன்றுவிடும் என்ற நம்பிக்கையை, மதக்குருமார்கள் பாமரமக்களிடையே ஊட்டிவைத்திருந்தனர். மக்கள், செய்த பாபங்களைப் போக்கப் பாபமன்னிப்புச் சீட்டு வாங்கிய தோடு நில்லாமல், இனிமேல் செய்யக்கூடிய பாபங்களுக்கும் சேர்த்துப் பாபமன்னிப்புச் சீட்டுகள் வாங்கிக்கொண்டனர். மன்னனிலிருந்து மண்வெட்டியான் வரையில், எல்லோரும் பாபமன்னிப்புச் சீட்டுகளை ஏராளமாக வாங்கினதால், பொன்னும் வெள்ளியும் மடாலயங்களிலும், மாதாகோயில்களிலும் குன்று போல் குவிந்தன. ஒரு குறிப்பிட்ட அளவு குறைந்ததொகையைச் செலுத்திவிட்டுப், போப்பாண்டவரிடமிருந்து மொத்தமாகப் பாபமன்னிப்புச் சீட்டுகளைப் பெற்று, அவற்றைச் சிறிது சிறிது லாபம் வைத்துப், படிப்படியாகச் சில்லரையாக விற்கவும் தொடங்கினர்.

சில சமயங்களில், பாதிரியார், பாபம் செய்தோரை வரும்படியாகக் கூவிப்பார்த்து, யாரும் வராவிட்டால், "உங்களில் பெரும்பாலோர், என்ன பாபம் செய்தோம் என்பதை ஒருக்கால் மறந்திருக்கக்கூடும்; ஆகையினாலே நான் உங்களைக் கேள்விகள் கேட்கிறேன்; அவற்றின் மூலம் நீங்கள் உங்கள் பாபச்செயல்களை நினைவுக்குக் கொண்டுவரக்கூடும். நீங்கள் கொலை செய்தீர்களா? கொள்ளையடித்தீர்களா? பொய் சொல்லினீர்களா? புன்மை இழைத்தீர்களா?" என்று கேட்கத் தொடங்குவாராம். பணம் சேர்ப்பதிலே அவ்வளவு அக்கரையும், ஆர்வமும் காட்டப்பட்டன!

காணிக்கையோடு ஏராளமான மக்களைக் கோயில்களுக்குத் தருவிக்கவேண்டிப், பற்பல மடங்களைச் சார்ந்தோரும், பல்வேறு வழிகளைக் கண்டுபிடித்தனர். கோயில்களில் ஏதேனும் அதிசயமான பொருள்களைக் காட்டினால், மக்களைப் பெரும் அளவில் ஈர்க்க, அதுவே சிறந்த வழியாகும் என்று கண்டனர். ஏசுவை அறைந்த சிலுவையிலிருந்து சிதறிய மரத்துண்டு, ஏசு பிறக்கும்போது எரிக்கப்பட்ட மெழுகுவர்த்தி, பீட்டர் கொண்டிருந்த மரப் பலகை, அன்னை மேரியின் மார்பில் சுரந்த பால் என்பனபோன்ற பொருள்களை, அதிசயப்

மூட நம்பிக்கையின் அடிப்படை

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

ஞாயிறு—திங்கள் கிரகணங்கள், பின்னால் ஏற்படும் கொள்ளை நோய், கொடும் பஞ்சம் ஆகியவற்றை முன்கூட்டியே அறிவிப்பவைகள் என்றும், வால் நட்சத்திரம் தோன்றுவது அரசர்களின் இறப்பையோ, நாடுகளின் அழிவையோ, போரின் வருகையையோ, அல்லது பிளேக்கின் தோற்றத்தையோ முன்கூட்டியே அறிவிக்கும் அறிகுறி என்றும் பன்னெடுங் காலமாக நம்பப்பட்டு வருகின்றன. வானத்தில் ஏற்படும் வியப்புக்குரிய மாறுதல்களான வடக்கே பால்வெளியின் வெளிச்சம் தோன்றுவது, மதியைச் சுற்றி வட்டம் ஏற்படுவது, பரிதியில் கறைகள் காணப்படுவது, விண்வீழ் கொள்ளி வீழ்வது போன்றவைகள், சிறிது அறிவு வந்த முன்னோர்களுக்கு மிக்க அச்சத்தைக் கொடுத்திருக்கின்றன. இப்படிப்பட்ட வானிலே நிகழ்ச்சிகளால் அச்சுறுத்தப்படும் அழிவைத் தடுக்கவேண்டி, அவர்கள், முழங்கால் படியிட்டுக்கொண்டு, அவைகளை நோக்கி வழிபாட்டுரைக் கூறியும், பலிகளிட்டும் வணக்கம் செலுத்தினர். அவர்கள் கண்களை மூடிக்கொண்டு, உதவிக்காக வானை நோக்கிக் கதறிடும் போது, அவர்களுடைய முகங்கள் அச்சத்தால் கவ்வப்பட்டிருந்தன. அந்தச் சமயங்களில், புரோகிதர்கள், தாங்கள் ஆண்டவனோடு நெருங்கிய பழக்கங்கொண்டவர்களாகவும், கிரகணங்கள், ஞாயிற்றின் கறைகள், வடக்கு வெளிச்சம், வால்நட்சத்திரம், விண்வீழ்கொள்ளி ஆகியவற்றிற்கான பொருள்களை அறிந்தவர்களாகவும், ஆண்டவனின் பொறுமை அற்றுப் போய்விட்டதையும், அவன் பழிவாங்க வாளைத் தீட்டிக்கொண்டிருப்பதையும் அறிந்து கொண்டவர்களாகவும், இப்பொழுது உள்ள புரோகிதர்களைப் போலவே பாசாங்கு செய்தனர். அவர்கள், மக்கள் இவ்விதத் தொல்லைகளினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், புரோகிதர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன்மூலமும், ஜெபமணிகளை உருட்டுவதன்மூலமும், பக்திக் காணிக்கையை இரட்டிப்பாக்குவதன் மூலமும் செய்துகொள்ளலாம் என்று சொல்லிவைத்தனர்.

நில அதிர்ச்சிகளும், பெரும் புயற்காற்றுகளும் மாதாகோயிலில் ஏராளமான மக்களைக் கொண்டுவந்து சேர்த்தன. பெருந் தொல்லைகளும் துயரங்களும் ஏற்படும்போது, கஞ்சத்தனம் கொண்டவன், தன் நடுக்கங்கொண்ட கைகளால், பணப்பையைத் திறந்தான். கிரகணங்கள் ஏற்படும்போது, திருடர்களும், கொள்ளைக்காரர்களும் கடவுளோடு சேர்ந்து, கொள்ளையிடப்பட்ட பொருள்களைப் பிரித்துக்கொண்டார்கள். ஏழ்மையும், நாணயமும், அறியாமையும் உடைய பெண்கள், தாங்கள் கடவுளுக்கு வழிபாட்டுரை கூற மறந்துவிட்டோம் என்பதை நினைத்துக்கொண்டு, தாங்கள் சேர்த்து வைத்திருந்த சிறிதளவு தொகையையும் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

நாம் இப்பொழுது அறிவோம், வானத்தில் நிகழும் வியப்புக்குரிய நிகழ்சிகள்—தோன்றும் அடையாளங்கள் ஆகியவற்றிற்கும், அரசர்கள்,

---

னையை ஏற்க இசைந்தார்; மறுக்கவில்லை; மன்னிப்புக் கோரவில்லை!

கி. பி. 1415 ஜூலைத் திங்கள் 6-ம் நாள், அவர் எரிக்கும் மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டுச், சுற்றிலும் சிதை யடுக்கப்பட்டு, நெருப்பு மூட்டப்பட்டு, அதற்கு இரையாக்கப்பட்டார்!

உண்மையை நிலைநாட்டும் உறுதி சாவை வரவேற்கச் செய்தது; புகழை நிலைநாட்டச் செய்தது!

மூட நம்பிக்கையின் அடிப்படை

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

ஞாயிறு—திங்கள் கிரகணங்கள், பின்னால் ஏற்படும் கொள்ளை நோய், கொடும் பஞ்சம் ஆகியவற்றை முன்கூட்டியே அறிவிப்பவைகள் என்றும், வால் நட்சத்திரம் தோன்றுவது அரசர்களின் இறப்பையோ, நாடுகளின் அழிவையோ, போரின் வருகையையோ, அல்லது பிளேக்கின் தோற்றத்தையோ முன்கூட்டியே அறிவிக்கும் அறிகுறி என்றும் பன்னெடுங் காலமாக நம்பப்பட்டு வருகின்றன. வானத்தில் ஏற்படும் வியப்புக்குரிய மாறுதல்களான வடக்கே பால்வெளியின் வெளிச்சம் தோன்றுவது, மதியைச் சுற்றி வட்டம் ஏற்படுவது, பரிதியில் கறைகள் காணப்படுவது, விண்வீழ் கொள்ளி வீழ்வது போன்றவைகள், சிறிது அறிவு வந்த முன்னோர்களுக்கு மிக்க அச்சத்தைக் கொடுத்திருக்கின்றன. இப்படிப்பட்ட வானிலை நிகழ்ச்சிகளால் அச்சுறுத்தப்படும் அழிவைத் தடுக்கவேண்டி, அவர்கள், முழங்கால் படியிட்டுக்கொண்டு, அவைகளை நோக்கி வழிபாட்டுரைக் கூறியும், பலிகளிட்டும் வணக்கம் செலுத்தினர். அவர்கள் கண்களை மூடிக்கொண்டு, உதவிக்காக வானை நோக்கிக் கதறிடும்போது, அவர்களுடைய முகங்கள் அச்சத்தால் கவ்வப்பட்டிருந்தன. அந்தச் சமயங்களில், புரோகிதர்கள், தாங்கள் ஆண்டவனோடு நெருங்கிய பழக்கங்கொண்டவர்களாகவும், கிரகணங்கள், ஞாயிற்றின் கறைகள், வடக்கு வெளிச்சம், வால்நட்சத்திரம், விண்வீழ்கொள்ளி ஆகியவற்றிற்கான பொருள்களை அறிந்தவர்களாகவும், ஆண்டவனின் பொறுமை அற்றுப் போய்விட்டதையும், அவன் பழிவாங்க வாளைத் தீட்டிக்கொண்டிருப்பதையும் அறிந்துகொண்டவர்களாகவும், இப்பொழுது உள்ள புரோகிதர்களைப் போலவே பாசாங்கு செய்தனர். அவர்கள், மக்கள் இவ்விதத் தொல்லைகளினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், புரோகிதர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன்மூலமும், ஜெபமணிகளை உருட்டுவதன்மூலமும், பக்திக் காணிக்கையை இரட்டிப்பாக்குவதன் மூலமும் செய்துகொள்ளலாம் என்று சொல்லிவைத்தனர்.

நில அதிர்ச்சிகளும், பெரும் புயற்காற்றுகளும் மாதாகோயிலில் ஏராளமான மக்களைக் கொண்டுவந்து சேர்த்தன. பெருந் தொல்லைகளும் துயரங்களும் ஏற்படும்போது, கஞ்சத்தனம் கொண்டவன், தன் நடுக்கங்கொண்ட கைகளால், பணப்பையைத் திறந்தான். கிரகணங்கள் ஏற்படும்போது, திருடர்களும், கொள்ளைக்காரர்களும் கடவுளோடு சேர்ந்து, கொள்ளையிடப்பட்ட பொருள்களைப் பிரித்துக்கொண்டார்கள். ஏழ்மையும், நாணயமும், அறியாமையும் உடைய பெண்கள், தாங்கள் கடவுளுக்கு வழிபாட்டுரை கூற மறந்துவிட்டோம் என்பதை நினைத்துக்கொண்டு, தாங்கள் சேர்த்து வைத்திருந்த சிறிதளவு தொகையையும் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

நாம் இப்பொழுது அறிவோம், வானத்தில் நிகழும் வியப்புக்குரிய நிகழ்சிகள்—தோன்றும் அடையாளங்கள் ஆகியவற்றிற்கும், அரசர்கள்,

---

ளையை ஏற்க இசைந்தார்; மறுக்கவில்லை; மன்னிப்புக் கோரவில்லை!

கி. பி. 1415 ஜூலைத் திங்கள் 6-ம் நாள், அவர் எரிக்கும் மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டுச், சுற்றிலும் சிதை யடுக்கப்பட்டு, நெருப்பு மூட்டப்பட்டு, அதற்கு இரையாக்கப்பட்டார்!

உண்மையை நிலைநாட்டும் உறுதி சாவை வரவேற்கச் செய்தது; புகழை நிலைநாட்டச் செய்தது!

நாடுகள் அல்லது தனிப்பட்டவர்கள் ஆகியோர்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை. அலைகளுக்கும், உலகில் வாழும் எறும்புகள், தேனீக்கூட்டங்கள், பூச்சிகளின் முட்டைகள் ஆகியவற்றிற்கும் எவ்வளவு இணக்கம் உண்டோ அதில் கூடவோ அல்லது குறைந்தோ அல்ல, அலைகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள இணக்கம். கிரகணங்கள் சில இடைவீடுகளில் வரும் என்பதை நாம் அறிவோம். அவற்றின் வருகைகூட, நம்மால், ஆராய்ச்சியின் மூலம், முன்கூட்டியே அறிவிக்கப்படமுடிகிறது.

சில உயிரற்ற பொருள்கள்கூட, தொல்லைகளையும் துயரங்களையும் போக்கி, நன்மை பயக்கும் அருந்தன்மைகொண்டவைகளாகச் சில காலத்திற்கு முன்புவரையிலும் மக்களால் நம்பப்பட்டுவந்தன. புனிதமான ஆண்-பெண் துறவிகளின் எலும்புகள், பெரிய துறவி ஒருவரின் கிழிந்த துணி, தியாகம் செய்தோரின் மயிர், ஏசுவை அறைந்த சிலுவையிலிருந்து எடுக்கப்பட்ட மரத்துண்டு, ஏசுவை அறைந்த துருப்பிடித்த ஆணிகள், பயபக்தியுடையோரின் பற்கள்—விரல் நகங்கள், இன்னும் இது போன்ற பொருள்கள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு, அவற்றை அரும்பொருளென நம்பி வந்தனர்.

ஒரு எலும்புத் துண்டையோ அல்லது கிழிந்த துணியையோ அல்லது ஒரு மரத் துண்டையோ அல்லது புனிதத்தன்மை கொண்ட மயிர்களையோ கொண்ட பெட்டியை முத்தமிட்டால், அதுவும் காணிக்கை செலுத்தி விட்டு முத்தமிட்டால், நோயாளியின் நோய் பறந்துவிடும் என்று நம்பப்பட்டது. இத்தகைய காணிக்கைகளால் மாதாகோவிலுக்கு ஏராளமான சொத்து சேர்ந்தது.

அத்தகைய எலும்பு அல்லது கிழிந்ததுணி அல்லது மரத்துண்டு ஏதாவதொன்றிலிருந்து அதிசயிக்கத்தக்க நன்மைபுரியும் ஆவி, பெட்டியை விட்டு வெளிக்கிளம்பி, நோயாளியிடம் சேர்ந்து, கடவுள் சார்பாக அவன் உடலில் நின்று, அவன் நோய்க்குக் காரணமான பிசாசுகளை விரட்டியடிக்கும் என்று மூடத்தனமாக நம்பினர்.

நோய் தீர்க்கும் எலும்புத் துண்டுகள், கிழிந்த துணிகள், புனிதமயிர்கள் ஆகியவற்றில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதற்கு, வேறோர் நம்பிக்கை மூலகாரணமாகும். அது தான், நோய்களெல்லாம், பிசாசுகளின் ஏவலின் பேரில் வருகின்றன என்று கொண்டிருந்த நம்பிக்கையேயாகும். சித்தம் கலங்கியவர்கள், பிசாசுகளால் பிடிக்கப்பட்டவர்களே என்று நம்பினர். மயக்கமும், நரம்புத்துடிப்பும் சாத்தான் அனுப்பிய பிசாசுகளால் ஏற்படுபவை என்று கருதினர். சுருங்கக் கூறவேண்டுமானால், மனிதனுக்கு ஏற்படும் ஒவ்வொரு தொல்லையும், நரகதேவனின் கொடிய ஏவலாளர்களால் உண்டாக்கப்படுவதாகும் என்று எண்ணினர். இத்தகைய நம்பிக்கை உலகெங்கும் இன்றைய நிலையில்கூட நிலவிவருகிறது. நமது காலத்திலேயேகூட கோடிக்கணக்கான மக்கள் புனித எலும்புகளின் தன்மையில் நம்பிக்கையும், பக்தியும் வைத்திருக்கத்தான் செய்கின்றனர்.

ஆனால், இன்று, பிசாசுகள் இருப்பதை, எந்த அறிவுள்ள மனிதனும் நம்புவதில்லை! பிசாசுகள் நோய்கள் உண்டாக்குகின்றன என்பதையும் எந்த அறிவுள்ள மனிதனும் நம்புவதில்லை! மேலும், புனித எலும்புகளோ அல்லது மயிர்களோ, கிழிந்த துணிகளோ அல்லது மரத்துண்டுகளோ நோயைப் போக்கும் என்பதையும், இழந்த நலத்தை மீண்டும் கொண்டுவந்து சேர்க்கும் என்பதையும், எந்த அறிவுள்ள மனிதனும் நம்புவதில்லை!

அறிவுள்ள மக்களனைவரும் அறிவார்கள், அடிகளார் ஒருவரின் எலும்புத் துண்டு விலங்கு ஒன்றின் எலும்புக் துண்டைக் காட்டிலும் எந்தவகையிலும் சிறிய நன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பதை. அதுபோலவே ஒரு நாடோடிப் பிச்சைக்காரனின் கிழிந்த ஆடை, அடிகளார் ஒருவரின் கிழிந்த ஆடையைப் போன்றே ஒரே தன்மையாக விளங்கக்கூடியது என்பதையும் அவர்கள் அறிவார்கள். குதிரையின் மயிரும், மதத்தியாகி ஒருவரின் மயிரைப் போலவே, அவ்வளவு விரைவாகவும், எளிதாகவும் நோய்நொடிகளைப் போக்கக்கூடியதுதான் என்பதையும் அவர்கள் தெளிவாக அறிவார்கள். புனிதப்பொருள் எல்லாம் மதக் குப்பை என்பதை நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். அந்தக் குப்பையைப் பயன்படுத்துபவர்களெல்லாம் நாணயமற்றவர்கள் என்பதையும், அதனை நம்பி வாழ்பவர்கள் அத்துணைப் பெரும் முட்டாள்கள் என்பதையும் நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.

தாயத்துக்களிலும் மந்திரங்களிலும், பேய்

விரும்பிய வண்ணமே விருந்து

[இரா. நெடுஞ்செழியன்]

அவளும் அவனும் இடையர் சேரியிலேயே குடியிருப்பதால், ஒருவரை யொருவர் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் பலப்பல. ஊர்ப் பொது இடங்களில் திருவிழாக்கள் நடக்கும் போதும், உறவினர் இல்லங்களில் திருமண விழாக்கள் நிகழும்போதும், நீராடுந் துறையிலும், நெடுந்தெருவின் கடையிலும், மாடு ஓட்டிச்செல்லும்போதும், மோர் விற்றுவரும் போதும் அவளை அவன் காண்பதுண்டு.

அவளைத் தற்செயலாகப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுவது போதாதென்று, அவளைக் காண்பதற்கென்று, அவனாகவே பல வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதுமுண்டு. அவளைப் பார்த்து மகிழ்வதற்கான வாய்ப்புகளுக்காக அவன் ஏங்கிக்கிடப்பான்; அலைந்து திரிவான்.

அவளைக் காணவேண்டுமென்பதிலே அவனுக்கு இருக்கிற ஆர்வம், அவனைக்காணுவதில் அவளுக்கு இருப்பதில்லை. அவள் அவனைப் பொதுநோக்காகத்தான் பார்ப்பது. அவளிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டதாக அவன் எண்ணுவான்; ஆனால் அவளோ அப்படி எண்ணுவதில்லை.

சிலபொழுது அவ்வழகியை அவன் எதிர்ப்படுவான்; அப்படியே நின்று, அவளையே உற்று நோக்கி, அவளது அழகைக் கண்ணால் பருகிக் கொண்டிருப்பான். வேறு சில பொழுது அவளையே பின்தொடர்ந்து செல்லுவான். ஆனால் அவனுடைய நோக்கத்தை, அவள் புரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்வதில்லை. அவனோ தன் காதல் வேட்கையைக் காட்டும் வழிகளிலெல்லாம் காட்டி வருகிறான். அவர்களிருவரும் ஒருவரையொருவர் அறிவார்கள்; ஆனால் ஒருவரோடொருவர் பேசியதில்லை.

ஒருநாள் அச்சிற்றிடைச்சி சாலைவழியேவந்து கொண்டிருக்கிறாள். அவளிடம் தன்னுடைய உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட இடையன் எதிரே போகிறான். சுற்றிலும் முற்றிலும்

களிலும் நம்பிக்கை வைப்பது மிகச் சாதாரணமான மூடநம்பிக்கையாகும்.

நமது முன்னோர்கள் இந்த அதிசயப் பொருள்களை நோய் தீர்க்கும் மருந்தாகவோ, அல்லது நோய் போக்கும் ஆற்றலாகவோ கருதவில்லை; மகான்களின் புனிதப்பொருள்களைக் கண்டு பேய் பிசாசுகள் அஞ்சுகின்றன என்றே கருதினர். அந்தப் பேய்பிசாசுகள் மகானின் எலும்பைக் கண்டவுடனும், உண்மைச் சிலுவையின் மரத்துண்டைப் பார்த்தவுடனும், புனித நீர் தெளிக்கப்பட்டவுடனும் அஞ்சி அந்தந்த இடங்களை விட்டு ஓடிவிடுகின்றன என்று அவர்கள் நம்பினர். ஆகையினாலே அந்தப் பேய் பிசாசுகள் புனிதக் கோயில் மணியின் ஓசையைக் கேட்டு அஞ்சுவதுடன் ஓடி ஒளிந்துவிடுகின்றன என்றும், மெழுகுவத்தியின் ஒளியைக் கண்டதும், ஏசுவின் சிலுவையைப் பார்த்ததும் மிக அஞ்சி ஓடுகின்றன என்றும் அவர்கள் கருதிவந்தனர்.

அந்தக் காலங்களில் புரோகிதர்கள் பணம் என்னும் மீனைப்பிடிக்கும் தூண்டில்காரர்களாக இருந்து, அதிசயப் பொருள்களைத் தூண்டில்களாகப் பயன்படுத்திவந்தனர்!

பார்க்கிறான். யாருடைய நடமாட்டமும் இல்லை என்பதை அறிந்துகொண்டு, அவளோடு பேச்சுக்கொடுக்க இதுதான் பொழுது என்று மனதில் உறுதிசெய்துகொள்கிறான். அவளுக்கு முன்னால் நின்று அவளை வழிமறிக்கிறான்.

அவள் திடுக்கிட்டு, "யார் இவன்? இவன் ஏன் என்னைத் தடுக்கவேண்டும்? இவனுக்கும் எனக்கும் என்ன உறவு?" என்று வேறு யாரையோ வினவுவதைப்போலப் புலந்து கூறுகிறாள்.

அவ்விளைஞன் எதிரில் நின்றுகொண்டு புன்முறுவல் செய்கிறான். அவனுடைய தோளில் பல மலர்களாலும் கட்டப்பட்ட மாலை அசைந்தாடிக் கமழ்ந்துகொண்டிருக்கிறது. அவன் தன்கையில் தாமரை மலர் ஒன்றை ஏந்திக் கொண்டிருக்கிறான். தான் வழிமறித்து நிறுத்துவதைக் கண்டு, அவள் திகைப்புக் கொண்டுள்ளாள் என்பதை அறிந்துகொண்ட அவன், அவள் திகைப்பை மாற்றத், தன்கையிலிருந்த தாமரை மலரை அவள் கையில் கொடுக்கிறான். அவள் வெட்கப்பட்டுச் சிறிது பின்வாங்குகிறாள். அவனோ விடாமல், அதனை வாங்கிக் கொள்ளுமாறு அவளை வற்புறுத்துகிறான். அவள் வேறு வழியின்றிக் கையில் வாங்கிக் கொள்கிறாள்.

"ஏன் இப்படி என்னை வழிமறிக்கிறாய்?" என்று தலைவி கேட்கிறாள்.

அதற்குத் தலைவன், "ஏன் என்றா கேட்கிறாய்? எல்லாம் உன்மீது கொண்ட அன்புதான்" என்று கூறுகிறான்.

"காளையை விரட்டி அதனைப்பிடித்த பிறகே, பெண்ணை மணம்புரிய மனம்கொள்ளவேண்டும் என்ற இடையர்குல ஒழுக்கத்தை நீ அறியாதவன்போல இருக்கிறாயே! நன்றாக இருக்கிறது, உன்னுடைய தன்மை! என்னோடு நீ இப்படிப் பழகும் தன்மையை என்னுடைய சுற்றத்தார் நன்றாக அறிந்திருக்கிறார்கள்! அதனால்தான், உன்னோடு பேசாதபடி என்னைப் பாதுகாத்துக் கொள்ளும்படியாக என்னிடம் கூறியுள்ளார்கள் போலேயிருக்கிறது! ஆகையினாலே நீ இங்கே நிற்காதே! போய்விடு." என்று தலைவி கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "ஏடி! பெண்ணே! 'விருப்பத்தை யுண்டாக்கும் கண்களையும், மனதைக் கலக்கிக், காமநோயை உண்டாக்கும் ஓவியம் எழுதப்பட்ட அழகிய தோளினையும் உடைய பெண்களைக் கண்டாயாகில், அவர்களை நீ போகவிடாதே; அவர்களால் உண்டான நோயை அவர்களைக் கொண்டே பரிகரித்துக் கொள்' என்று என்னுடைய சுற்றத்தார் எனக்குக் கூறியுள்ளார்கள்" என்கிறான்.

அதுகேட்டிருந்த தலைவி, "அப்படிப் பரிகரித்துக்கொள் என்று உன்னுடைய சுற்றத்தார்கள் உனக்குக் கூறினார்களா? நன்றாக இருக்கிறது அவர்கள் கூற்று! நல்ல பெண்களைப் பார்த்தால் அவர்களைப் போகாமல் தடுத்து, அவர்களை விரும்பி, அவர்களுடைய பூக்களைப்போன்ற அழகிய கண்களையும், புகழப்படக்கூடிய தோள்களையும் பாடும்படியாக, உனக்கு நல்லதொரு தொழிலைக் கற்பித்தார்கள்! அவர்கள் இன்னமும் அழிந்துபோகாமலிருக்கிறார்களே! என்னுடைய சுற்றத்தாரிடத்து, ஒரு திருமணத்தை முடிவு செய்வதற்காக, உன்னுடைய சுற்றத்தார் மேற்கொண்ட செயல் மிக நன்றாக இருக்கிறது! இந்த முறையில், உன்னுடைய சுற்றத்தார்கள், பெரிய வல்லவர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே!" என்று இகழ்ச்சிக்குறிப்பு தோன்ற கூறுகிறாள்.

"ஓ! அப்படியா செய்தி' யாரும் நடமாட அஞ்சும் இந்த வெய்யில் எரிக்கும் வேளையில், நீ கன்று மேய்ப்பவளைப் போல வந்து, பிறர்க்கு நோயை உண்டாக்குகிற தன்மையை, எனக்கு, என் சுற்றத்தார் கூறாமலிருந்திருப்பார்களாயின், அவர்கள், என்னை இகழ்கிறார்கள் என்றல்லவோ பொருள்படும். ஆகவேதான், தம்மேல் குற்றம் இல்லாதபடிக்கு, உன்னைப்பற்றி என் சுற்றத்தார்கள் என்னிடம் கூறியுள்ளார்கள்!" என்று கூறுகிறான் தலைவன்.

"கூறியிருப்பார்கள்! கூறியிருப்பார்கள்! ஏன் கூறமாட்டார்கள்! ஏடா! நீ சொல்லுவது அத்தனையும் பொய்யென்று நான் சொல்லித்தான் நீ அறியவேண்டுமா? நான் எதும் அறியமாட்டேன் என்று நினைக்காதே! நீ சொல்லுவதெல்லாம் பொய் என்பதை நான் நன்கு அறிவேன், தெரியுமா? எனவே இனி நீ இப்படிச் சொல்லுவதைக் கைவிட்டுவிடு" என்று ஏளனத்தோடு கூறுகிறாள்.

"பெண்ணே! உன்னுடைய கருமையான கூந்தல் எவ்வளவு அழகுடையதாய் இருக்கிறது, தெரியுமா? நான் கூறிய சொற்களை யெல்லாம்

நீ எப்படிப் பொய்யென்று சொல்லுகிறாய்? நான் பொய் கூறவேண்டிய அவசியமில்லையே! அதுகிடக்கட்டும், உன்னுடைய சுற்றத்தார், என் முன்னே நின்று பேசாமல் உன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்படியாகத்தான் உன்னிடம் கூறினார்களேயல்லாமல், நீ என்னைக் கட்டித் தழுவாமல் உன்னை நீ பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லினார்கள்? இல்லையே! ஆதலால் நீ என்னை மெத்தெனக் கட்டித்தழுவிக்கொள்வாயாக! அப்பொழுது நான் உன்னுடைய இனிய இதழைச் சுவைப்பேன்!" என்று தலைவன் கூறுகிறான்.

தலைவனின் சொற்களைக் கேட்டுத் தலைவிக்கு நெஞ்சு தடுமாறுகிறது. அவளுக்கு அவன்மீது ஆசையும் இருக்கிறது; சுற்றத்தார்கள் என்ன சொல்லுவார்களோ என்று நினைத்து, அவளிடம் அச்சமும் பிறக்கிறது. அவள் தன் நெஞ்சோடு சிறிதுநேரம் பேசிப் பார்க்கிறாள்; அவனைக் கட்டித் தழுவிக்கொள்ளுவது தவறு அல்லது அல்லவா என்று கேட்டுப்பார்க்கிறாள். "அவன் கூறும் கூற்றுக்களெல்லாம் உண்மையாகவே இருக்குமானால்......" என்று தன் நெஞ்சிடம் சொல்லிப் பார்க்கிறாள்; உடனே நெஞ்சு "அப்படியானால், நீ அவனோடு மணவாழ்க்கையில் ஈடுபட்டவளாகின்றாய்!" என்று கூறுகிறது! "அவன் கூறும் கூற்றுக்களெல்லாம் பொய்யாக இருக்குமேயானால்..." என்று தன் நெஞ்சினைக் கேட்டுப்பார்க்கிறாள்; அதற்கு அவளுடைய நெஞ்சம், "அவனுடைய மார்பில் கமழ்கின்ற மாலையைக்கண்டு, ஆசைப்பட்டு, வருந்தின உனது அழகிய இதழ்போலும் கண்கள், பசலை நிறம்கொள்ளும்; அழகிய உன்னுடைய் மெல்லிய தோள்கள் மனும் மெலியும்; அவன் உன்னை விட்டுவிட்டுப் போனால் இவையெல்லாம் நிகழும்; ஆனாலும் உனது அழகு குறையாது; இப்பொழுதிருப்பதைப் போலவே தான், அப்பொழுதும் உனது உடல் அழகுடையதாக இருக்கும்" என்று கூறுகிறது. அக்குறைகள் கூடியமட்டிலும் சிந்தனை செல்து பார்க்கிறாள்; இறுதியில், அவன், தன்னைக் கைவிடமாட்டான் என்று உறுதிசெய்துகொண்டு, அவனோடுகூடிக்குலாவி மகிழ்ந்திருக்க ஒருப்படுகிறாள். அவன் மகிழ்கிறான். அவன் விரும்பியவண்ணமே விருந்து கிடைக்கிறது! இருவரும் களவொழுக்கத்தில் இறங்குகிறார்கள்.

ஃ ஃ ஃ

சோழன் நல்லுத்திரன் பாடிய முல்லைக்கலியின் 12-வது செய்யுளின் கருத்தே மேலே தீட்டிக் காட்டப்பட்டிருப்பதாகும். காதலர்கள் முதலில் தங்கள் கண்களால் பேசிக்கொள்வதும், பிறகு ஒருவரை யொருவர் தனியாக எதிர்ப்படுவதும், அப்படி எதிர்ப்படும்போது காதலன் தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதும், காதலி முதலில் மறுத்துரைப்பதும், பிற்பாடு இணங்குவதும், பின்னர் களவொழுக்கம் நடத்துவதும் ஆன காதலொழுக்கங்கள் இத்தகைய செய்யுட்களால் அழகுபட விரித்துரைக்கப்படுகின்றன. காதலன் காதலியர்க்கிடையே நிகழும் நகைச்சுவை உரையாடல்களை ஆசிரியர் இச்செய்யுளில் மிக நயம்பட விளக்கிக்காட்டியுள்ளார்.

ஃ ஃ ஃ

யாரிவன் என்னை விலக்குவான் நீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்ல(ல்) ஓம்(பு) என்றார் எமர்;
எல்லா, கடாஅய கண்ணால் கலைஇய நோய்செய்யும்
நடாஅக் கரும்(பு) அமன்ற தோளாரைக் காணில்
விடா அ(ல்)ஓம்(பு) என்றார் எமர்;

கடாஅயார் நல்லாரைக் காணில் விலக்கி நயந்தவர்
பல்லிதழ் உண்கண்ணும் தோளும் புகழ்பாட
நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்லர் எமர்கண் செயல்;

ஓஒ வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப்பாய்போல்
வழங்கல் அறிவார் உரையாரேல் எம்மை
இகழ்ந்தாரே அன்றோ எமர்;

ஒக்கும், அறிவல்யான் எல்லா விடு;

விடேன்யான் என்நீ குறித்த(து) இருங்கூந்தால்
நின்னைஎன் முன்னின்று
சொல்ல(ல்) ஓம்(பு) என்றமை அன்றி அவனைநீ
புல்ல(ல்) ஓம்(பு) என்ற(து) உடையரோ மெல்ல
முயங்குநின் முள்எயி(று) உண்கும் எவன்கொலோ
மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
வா(ய்)ஆவ தாயில் தலைப்பட்டாம் பொய்ஆயில்
சாயலின் மார்பில் கமழ்தார் குழைத்த நின்
ஆ(ய்)இதழ் உண்கண் பசப்பத் தடம்மெல்தோள்
சாயினும் ஏஎர் உடைத்து

[முல்லைக்கலி—12]

[நீர் உளர் - நீரிலே அசைகின்ற; பூந்தாமரை - அழகுடைய தாமரை; போது - மலர்; விரவுத்தார் - பல மலர்கள் விரவக்கட்டப்பட்ட மாலை; கல்லா - இடையர்குல ஒழுக்கம் கல்லாத; பொதுவன் - இடையன்; ஓம்பு - பாதுகாத்துக்கொள்; எமர் — சுற்றத்தார்; எல்லா - எடி; கட்டாஅய--வேட்கை கொண்ட, கலைஇய - கலக்கின; நோய் செய்யும் — காமநோயை உண்டாக்கும்; நடாஅக்கரும்பு — நடாதகரும்பு, அதாவது தோளிலே எழுதப்படும் கரும்புபோன்ற ஓவியம்; அமன்ற — நெருங்கின; விடால் - விடாதே; கடாஅயார்-அப்படிக்கூறியவர்கள்; நல்லாரை - பெண்களை; நயந்து — விரும்பி; நுமர் - உன்னுடைய சுற்றத்தார்; வல்லர் - வல்லவராயிருந்தார்; வழங்காப்பொழுது — யாரும் நடமாடாத உச்சிக்கால வெய்யில்பொழுது; எல்லா - எடா; இருங்கூந்தல்—கரிய கூந்தல்; புல்லல் — தழுவுதல்; முயங்கு - கட்டித்தழுவு; முள்எயிறு - சிறிய பற்கள்; உண்கும் — சுவைப்பேன்; வாய் ஆவதாகில் - உண்மையாக இருக்குமேயானால்; பொய் ஆயில்-பொய்யாக இருக்குமேயானால்; சாயலின் - மென்மை இனிதாகிய; கமழ்தார் - மணம்கமழும் மாலை; குழைத்த - வருந்தின; பசப்ப - பசலைநிறங்கொள்ள; சாம்பல் படர்ந்ததைப் போன்றதொரு நிறம் படர்தல்; தடம் — பெருமையையுடைய. மெல் — மெல்லிய; சாயினும் — மெலியினும்; ஏஎர் — அழகு.]

கனவை நனவாக்கிய வீரன்

கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டில் ஹியூயெல்வா என்ற இடத்தில் ஒரு மாதாகோயில் விடுதியில் சென்று தங்கினான். அங்கு லா ராபிடா என்ற பாதிரியாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டான். அந்தப் பாதிரியாரும், மற்றும் சில நண்பர்களும் கொலம்பஸின் மேற்குப் பயணத்திட்டத்தை ஆதரித்தார்கள். ஆனாலும் பெரும்பாலானோர் கொலம்பஸைப் பைத்தியக்காரன் என்றே கருதினார்கள். கொலம்பஸ் ஹியூயெல்வாவில் தங்கியிருந்த போது, புத்தகங்களையும், நிலப்படங்களையும் விற்பதன்மூலம் வயிற்றுப்பிழைப்பைக் கவனித்துவந்தான். கோர்டோவா என்ற இடத்தைச் சேர்ந்த பியாட்ரிஸ் என்ற பெண்ணை மீண்டும் மணம்செய்துகொண்டான். அவனுக்கு பேர்னாண்டோ கோலான் என்ற மகன் பிறந்தான். பேர்னாண்டோவிடத்தில்தான் கொலம்பஸ் இறுதிநாள் வரையில் அன்பு காட்டி வந்தான்.

கொலம்பஸ், லா ராபிடா என்ற பாதிரியாரோடும் மற்ற நண்பர்களோடும் அடிக்கடிக் கூடிக் கலந்திருந்து, உலக அமைப்பு, அதில் பல்வேறு நாடுகளின் இருப்பு, அவற்றிற்கிடையே உள்ள தொலைவு ஆகியவைபற்றி ஆராய்ச்சி செய்வது வழக்கம். கொலம்பஸ் மிக்க ஏழையாக இருந்ததால், தன்னுடைய கருத்தை நிறைவேற்றிக்கொள்ள வசதியில்லாமலிருந்தது. பணம்படைத்த சீமான்கள் பலரை நாடினான். எல்லோரும் கொலம்பஸின் கருத்தை வேடிக்கைக் கதையாக நினைத்து நகைத்தனரேயல்லாமல், யாரும் உதவிசெய்ய முன்வரவில்லை. 1486-ம் ஆண்டில் ஒரே ஒரு சீமான் மட்டும் ஒரு கப்பலைக் கொடுத்துதவ முன்வந்தான். இந்தியாவைக் கண்டுபிடிப்பதற்காகக், கொலம்பஸிடம், தான் கப்பல் ஒன்றைக் கொடுத்துதவப் போகிற செய்தியை, அந்தச் சீமான், ஸ்பெயின் நாட்டின் ஆளும் அரசியான இஸபெல்லாவிடம் கூறினான். இஸபெல்லா அந்தச் செய்தியில் விருப்பஞ்செலுத்தியவளாய்க் கொலம்பஸைத் தன் நாளவைக்கு வரும்படி பணித்தாள். இஸபெல்லாவும் அவளுடைய கணவனான பெர்டினாண்டும் சீமான்கள், பெரியோர்கள், பொதுமக்கள், பாதிரிமார்கள் ஆகியோரை நாளவையில் கூட்டிவைத்து, அவர்களுக்கு முன்னிலையில், தன்னுடைய திட்டத்தை விளக்குமாறு கொலம்பஸுக்குப் பணித்தார்கள். கொலம்பஸ் தன்னுடைய திட்டம் வெற்றிபெறக்கூடும் என்பதை முழுத்திறமையோடு விளக்கம் செய்தான். எல்லோரும் திட்டம் பயன்தரும் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை; உலகம் உருண்டை என்ற தத்துவத்தின்மீது இந்தத் திட்டம் கட்டப்பட்டிருந்த ஒரு காரணத்திற்காகவே பலர் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். இதனால் முன்பு உதவிசெய்ய முன்வந்த சீமான்கூட தன் உதவியை நிறுத்திக்கொண்டான். பிறகு கோர்டோவா, சாலமான்கா என்ற இடங்களில் பலரையும் கூட்டிவைத்துத் தன் திட்டத்தை விளக்கிக்காட்டினான் கொலம்பஸ். அங்கும் அவனது எண்ணம் வெற்றிபெறவில்லை.

அரசி இஸபெல்லா, கொலம்பஸின் கருத்தில் விருப்பங்காட்டி, அவனுக்கு ஓராண்டு உபகாரச்சம்பளம் கொடுத்து, பின்பு ஒருமுறை அவனது திட்டம் பற்றி ஆராயலாம் என்று கூறியிருந்தாள். கொலம்பஸ் நம்பிக்கையிழந்துவிடாமல், அந்த நல்லகாலத்தை எதிர்பார்த்திருந்தான். பயணத்திட்டம் அவனது உள்ளத்தை எப்பொழுதும் குடைந்து

கொண்டேயிருந்ததால், கொலம்பஸால் வாளா பொறுத்துக்கொண்டு வீணே காலங்கழிக்க முடியவில்லை. வேற்று நாட்டு அரசர்களிடம் சென்று உதவிக்கு முறையிடலாமா என்று சிந்தித்தான். லா ராபிடா போன்ற அவனுடைய நெருங்கிய நண்பர்கள், கொலம்பஸின் திட்டத்தால் பெரிதும் கவரப்பட்டிருந்ததால், மீண்டும் ஒருமுறை அரசியாரிடம் தூது சென்று பார்க்கலாம் என்று சொல்லிக் கொலம்பஸுக்கு ஆறுதல்மொழி கூறித், தடுத்து நிறுத்தியிருந்தார்கள்.

அரசி இஸபெல்லா, மூர் என்ற இஸ்லாமியரின் ஆளுகையின் கீழ் இருந்துவந்த கிரானடா என்ற தலைநகரை முற்றுகையிட வேண்டி, சாண்டா பே என்ற இடத்தில் மாடிவீடு அமைத்துக்கொண்டிருந்தாள். அரசிக்கு மிகவும் வேண்டியவரான ஒரு பெரியவர் மூலம், கொலம்பஸின் திட்டம் அரசியாருக்கு மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரப்பட்டது. கொலம்பஸ் அரசியார்முன் அழைக்கப்பட்டான். கிரானடா கைப்பற்றப்பட்டதற்குப் பிறகு, கொலம்பஸுக்கு உதவி செய்வதாக அரசி வாக்களித்திருந்தாள்.

சிறிது நாட்களில் கிரானடாவும் வீழ்ச்சியுற்றது; கொலம்பஸ் உள்ளத்தில் மகிழ்ச்சியும் பிறந்தது. கொலம்பஸ் புதியநாட்டைக் கண்டுபிடித்துவிட்டதுபோலவும், தன்வசம் பல நாடுகள் வந்துவிட்டதுபோலவும், அவற்றை அரசியிடம் ஒப்படைக்க நிபந்தனைகள் பல தேவைப்படுவதுபோலவும், உலகிலுள்ள அரசர்களைவிட தான் பெரிய பணக்காரனாக ஆகிவிட்டதுபோலவும் பகற் கனவு கண்டுகொண்டு அந்தப்படிக்கு அரசியிடம் நிபந்தனைகள் கேட்டான். தான் கொண்டுவரப்போகும் பொருள்களில் தனக்கு உரிய பங்கு வேண்டுமென்றும், தன் வழிவழித் தலைமுறையினர் கடலாதிக்கம் முழுவதையும் தொடர்ந்து பெற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்றும், கண்டுபிடிக்கப்பட்டு, சேர்க்கப்படப்போகிற நாடுகளுக்குத் தன்னையும், தன் வழிமுறையினரையும் தொடர்ந்து துணை அரசர்களாக நியமிக்கவேண்டும் என்றும் நிபந்தனைகளைப் போட ஆரம்பித்தான். இந்தியாவைக் கண்டுபிடிக்கமுடியுமா, முடியாதா என்ற எண்ணமே உறுதி செய்யப்படாமலிருக்கும் போது, கொலம்பஸ் ஆகாத நிபந்தனைகளில் நினைவைச் செலுத்தினான். கொலம்பஸின் போக்கு கண்டு சினங்கொண்ட பெர்டினாண்டு, கொலம்பஸோடு கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கு முடிவுகட்டினான்; உதவிசெய்ய மறுத்தான். கொலம்பஸ் வெறுங்கையோடு வெளியேறினான். ஆனால், அரசி இஸபெல்லா மனம் இளகினவளாய், கொலம்பஸின் திட்டம் ஈடேறுவதற்கு உதவி செய்வதாக வாக்களித்தாள்.

பாலோஸ் என்ற துறைமுகத்தில் நிறுத்தியிருந்த அரசாங்கக் கப்பல்களான சாண்டா மரியா, பிண்டா, நைனா என்ற மூன்றும் கொலம்பஸின் வசம் ஒப்படைக்கப்பட்டன. சாண்டா மரியா என்ற கப்பலின் மாலுமியாக கொலம்பஸ் இருந்துகொண்டான். மற்ற இரண்டு கப்பல்களுக்கும் மார்ட்டின் அலோன்ஸோ பின்ஜான் என்பானும், வின்சென்ட் யானெஜ் பின்ஜான் என்பானும், மாலுமிகளாக இருக்க இசைந்தனர்.

கப்பல்கள் மூன்றும் 1492-ம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 3-ம் நாள் மேற்கு முகம் நோக்கிப் புறப்பட்டன. கப்பல்கள் கானரி தீவுகளில் மூன்றுவார காலம் தங்கி, பழுதுபார்த்துக் கொள்ளவேண்டி நேரிட்டது. பிறகு செப்டெம்பர் திங்கள் 6-ம் நாள் யாரும் போயறியாத பெருங்கடலில் கப்பல்கள் புகுந்தன. கப்பல்கள் மூன்றும் இரவு பகலாகப் பல நாட்கள் மேற்குநோக்கிச் சென்றுகொண்டிருந்தன. தான் வந்த தொலைவையும், அடையவேண்டிய தொலைவையும் குறிப்பிடுவதற்குக் கொலம்பஸ் இரண்டு கணக்குகள் வைத்திருந்தான். தன் உடன் வருபவர்கள் சோர்ந்துபோய்விடக் கூடாது என்பதற்காக, வந்த தொலைவையும் குறைத்துச், சேரவேண்டிய தொலைவையும் குறைத்துக் கணக்குச் சொல்லிக்கொண்டே சென்றான்.

நாளாக நாளாகக் கொலம்பஸோடு வந்த கப்பலோட்டிகள் நம்பிக்கையிழந்து, சோர்வடைய ஆரம்பித்தார்கள். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வலுவான பருவக்காற்று அடித்ததால், கப்பல்கள் தங்குதடையின்றி விரைவாக மேற்குநோக்கிச் சென்றன. இது கொலம்பஸுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது என்றாலும் மற்றவர்களுக்கு எப்படி நாடு திரும்புவோமோ என்ற அச்சத்தைக் கொடுத்தது. கொலம்பஸ் அவர்களுக்கெல்லாம் ஆறுதல்மொழி கூறி

அழைத்துச்செல்வது அரும்பாடாகிவிட்டது. சில நேரங்களில் அவர்கள் கொலம்பஸுக்கு மாறுபாடாய், அவனை எதிர்த்துச் சண்டை செய்யவும் கிளம்பினார்கள்.

பகலும் இரவும் மாறிமாறி வந்துகொண்டேயிருந்தன. கொலம்பஸுக்குக் கவலை அதிகமாகிக்கொண்டேயிருந்தது. சுற்றிலும் கண்ணுக்செட்டிய அளவுக்கு நீலக்கடலும், வெள்ளிய அலைகளும், ஞாயிற்றின் கதிரால் ஏற்படும் பளபளப்பும் மட்டுமே அவர்கள் பார்வைக்குப் பட்டன. கரையேதும் கண்ணுக்கு அகப்படவில்லை. கொலம்பஸ் ஊக்கத்தையும், உறுதியையும் கைவிடாமலே வெற்றியை எதிர்பார்த்துச் சென்றுகொண்டிருந்தான்.

அக்டோபர் திங்கள் தொடங்கியவுடன், கரை அண்மையில் இருப்பதற்கான அறிகுறிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிந்தன. எல்லோரும் மிக்க ஆவலோடு முன்னேறிக்கொண்டிருந்தனர். யார் கரையை முதன்முதல் பார்க்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு தருவதாகக் கொலம்பஸ் வாக்களித்தான். அக்டோபர் திங்கள் 11-ம் நாள் இரவு நெருங்கும் நேரத்தில், நெடுந்தொலைவில் விளக்குகளின் சாயல் தண்ணீரில் தென்படுவதைப் பார்த்தார்கள். பிண்டா என்ற கப்பல் முன்னால் சென்றுகொண்டிருந்தது. அதற்குள் இரவு வந்து எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் பிண்டா என்ற அந்தக் கப்பலிலிருந்து வெடிகுண்டு ஓசை கிளம்பி, கரை தென்பட்டதை அறிவித்தது. கப்பலோட்டிகள் விரைவாகக் கப்பல்களைச் செலுத்தினார்கள்; ஆனால் காற்று எதிர்புறமாக வீசியதால் கப்பல்கள் தேங்கி நிற்கும்படி ஏற்பட்டுவிட்டன. 1492-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ம் நாள் காலை கொலம்பஸும் ஏனையோரும் மரங்கள் நிறைந்த தீவு ஒன்றைக் கண்டார்கள். அவர்களெல்லோரும் கரையைநோக்கிச் செல்லும்போது, கரையில் பழுப்பு நிறமும், அலங்கோலமான ஆடையும் உடைய ஆண்களும் பெண்களும் தங்களை நோக்கிப் பார்த்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தார்கள். அவர்கள் அநாகரிக மக்களாகவும், புதிதாக வந்தவர்களிடத்தில் வெறுப்புணர்ச்சியற்றவர்களாகவும், நல்ல விதத்தில் பழகும் பண்பினராகவும் காணப்பட்டார்கள். அவர்களுடைய தொழில் வேட்டையாடுவதும், மீன் பிடிப்பதுமாக இருக்கக்கண்டார்கள். அவர்களோடு சரியாகப் பேச முடியவில்லை. என்றாலும், அவர்களிடமிருந்து அறிந்துகொண்ட குறிப்புகளால், இத்தீவை ஒட்டி பல தீவுகளும், அவைகளை அடுத்துப் பெரிய பரந்த நிலப்பரப்பு இருப்பதையும் தெரிந்துகொண்டார்கள். கொலம்பஸ் தான் ஆசியாவின் கிழக்குக்கரையைப் பிடித்துவிட்டதாக நினைத்தான். கொலம்பஸும் ஏனையோரும் வியப்புக்குரிய காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் கண்டுகொண்டே, பல தீவுக்கூட்டத்தைக் கடந்து அக்டோபர் 28-ம் நாள் அமெரிக்காவின் கியூபா பகுதியை அடைந்தனர். அங்குள்ள மக்களை முதலில் இந்தியர் என்றும் அந்தப் பகுதியை இந்தியா என்றும் எண்ணினர். பிறகே தம்முடைய தவறுதலை உணர்ந்து, தாம் கண்டுபிடித்தது இந்தியா அல்ல, வேறு ஒரு நிலப்பரப்பு என்று கண்டுகொண்டனர். கியூபா பகுதியைக் கொலம்பஸ் முதன்முதலில் இஸ்லா பேர்னாண்டினா என்ற பெயரிட்டழைத்தான். பிறகு தெற்கு நோக்கிக் கடற்கரைப் பகுதி வழியாகச் சென்றான். மீண்டும் திரும்பி வந்து கப்பலில் தென்கிழக்கு நோக்கிச்சென்று, வேறு ஒரு இடத்தில் கரையேறி, அந்த இடத்துக்கு ஹிஸ்பானியோலா என்று பெயரிட்டான். இங்குள்ள நிலைமைகளையெல்லாம் பார்த்தபோது, செல்வச் செழிப்பும், வாணிக ஏற்றமும் கொண்ட ஆசியாவின் பகுதியைத் தான் காணவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டான். ஹிஸ்பானியோலாவிலுள்ள மக்களின் உதவியால் தங்கம் கிடைக்கும் பகுதிகளைக் கண்டான்.

கொலம்பஸ் மேலும் பல பகுதிகளைக் கண்டுபிடிப்பதில் நாட்டங்கொள்ளாமல், புதியகாட்டைக் கண்டுபிடித்த செய்தியை ஸ்பெயினுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும் என்று துடியாய்த் துடித்தான். நாடு திரும்புவதற்கு ஆயத்தப்பட்டான். அதற்குள் பிண்டா என்ற கப்பல், கொலம்பஸைக் கலக்காமல் தன் இச்சைப்படி தங்கச்சுரங்கங்களைத் தேட புறப்பட்டுப்போய்விட்டது. புதிய ஆதிக்கத்தை அயல் நாடுகளில் நிறுவுவதில் ஏற்பட்ட முதல் போட்டி இதுவேயாகும். கொலம்பஸ் பிண்டா கப்பலுக்காகத் தன் பயணத்தை ஒத்திப்போடவேண்டி நேர்ந்தது. அந்தக் கப்பல் தன்போக்கிலிருந்து திரும்பி வந்தவுடன், அதன் கப்பலோட்டிகளை மன்னித்துத், தன்நாடு திரும்ப கொலம்பஸ் முயற்சித்தான். புதிய கண்டத்

தில் கண்டுபிடித்த பகுதிகளுக்குத் தன்னை அதிபதி ஆக்கிக்கொண்டு, தன்னோடு வந்த சிலரை ஹிஸ்பானியோலாவில் விட்டுவிட்டு ஸ்பெயின் நாட்டுக்கு, 1493 ஜனவரி 14-ம் நாள் புறப்பட்டான்.

காற்று கிழக்கு நோக்கித் திரும்புவதற்குச் சாதகமாய் இருந்ததால், கொலம்பஸ் விரைவில் ஸ்பெயின் நாடு போய்ச் சேர்ந்தான். கொலம்பஸ் பொலிவோடும், பெருமிதத்தோடும், பூரிப்போடும் ஸ்பெயின் நாட்டிற்குள் புகுந்தான். மக்கள் ஆரவாரித்து வரவேற்றார்கள். எந்த அரசியின்முன்னால் முன்பு பிச்சைக்காரன் போல் நின்றானோ, அதே அரசியின்முன்னால் இப்பொழுது பிரபுபோலக் காட்சியளித்தான். தன்னுடைய பயணத்தின் வரலாற்றைப் பெருமிதந்தோன்றக் கூறினான்.

மீண்டும் செப்டெம்பர் திங்கள் 25-ம் நாள், இரண்டாவது தடவையாக 17 கப்பல்களையும், 1500 பேர்களையும் அழைத்துக்கொண்டு, புதிய கண்டம் நோக்கிப் புறப்பட்டான் கொலம்பஸ். கொலம்பஸ் இந்தத்தடவை சிலபகுதிகளைக் கண்டான். ஏற்கனவே புதிய கண்டத்தில் விடப்பட்டிருந்த ஸ்பானிஷ்காரர்கள் உள்நாட்டு மக்களோடு தகராறுகள் செய்துகொண்டதால், புதிதாகக் குடியேறுவதில் பலதொல்லைகள் ஏற்பட்டன. கொலம்பஸுக்கு அடங்கி நடக்கப் பலர் மறுத்து, தங்கள்தங்கள் விருப்பப்படி நடந்துகொண்டார்கள். இதனால் குழப்பங்கள் ஏற்பட்டன. செல்வம் மிகுந்த ஆசியாவைக் கண்டுபிடிப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்ற கொலம்பஸ், ஆசியாவை அவன் கூறியபடி கண்டுபிடிக்காத காரணத்தால், அவன் பேரில் ஸ்பெயின் அரசவையில் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமைகளையெல்லாம் அறிந்த கொலம்பஸ் தான் குற்றமற்றவன் என்பதை வெளிப்படுத்த மீண்டும் ஸ்பெயின் நாட்டிற்குத் திரும்பினான். அரசவையில் தன்னுடைய காரணங்களை எடுத்துக் கூறினான். அரசிக்கு வெறுப்பு குறைந்தது. மூன்றாவது முறைப் பயணத்திற்கும் ஏற்பாடு செய்தாள்.

கொலம்பஸ் ஸ்பெயின் நாடு திரும்பிய பொழுது, கொலம்பஸின் தம்பி பார்த்தலோமியோ என்பான், குடியேற்றப்பகுதியில் ஆதிக்கம்செலுத்தினான். அவனுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் பலர் குழப்பம் செய்தார்கள். கொலம்பஸ் சென்று பார்த்தபொழுது, நிலைமை மிகக் கேடுற்று இருப்பதைக் கண்டான். தகராறுகளைத் தீர்த்துவைக்கும் திறமை படைத்த அதிகாரி ஒருவனை, புதிய நாட்டிற்கு அனுப்பி வைக்கும்படி ஸ்பெயின் அரசாங்கத்திற்குச் செய்தி அனுப்பினான். ஸ்பெயின் அரசாங்கம் போபாடில்லா என்ற அதிகாரியை அனுப்பி வைத்தது. அவன் புதியநாட்டிற்கு வந்து சேர்ந்தான். அவன் கொலம்பஸையும், அவன் தம்பி பார்த்தொலோமியோவையும் கைது செய்து, இருப்புச் சங்கிலியால் பிணைத்து, ஸ்பெயின்நாட்டிற்கு அனுப்பிவைத்ததோடல்லாமல், புதிய நாட்டிலிருந்த அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதலும் செய்துகொண்டான்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்துச் சொல்லிய கொலம்பஸுக்கு இருப்புச் சங்கிலி பரிசாக வழங்கப்பட்டது! நிலைமை அவ்வளவு கொடியதாகக் காட்சியளித்தது!

கொலம்பஸ் புதிய அதிகாரிக்கு மாறுபாடாக இருந்தான் என்பதே, அவன் செய்த குற்றம். கொலம்பஸ் இருப்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட தோற்றத்தோடு ஸ்பெயின் நாட்டின் கரையில் இறங்கினான். ஆனால், ஸ்பெயின் அரசாங்கம் அவன்மீது பூட்டப்பட்டிருந்த இருப்புச் சங்கிலிகளை அவிழ்த்து, அவனுக்கு விடுதலை வழங்கி, அவனுக்கு முறைப்படி கொடுக்கவேண்டிய மரியாதைகளைக் கொடுத்து, அரசவைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டது. கொலம்பஸ் மன்னிக்கப்பட்டான்; ஆனால் மீண்டும் புதிய நாட்டிற்குப் போகக் கூடாது என்று கட்டளை யிடப்பட்டான். மேற்கொண்டு நடத்தப்பட்ட புதியநாட்டுக் கண்டுபிடிப்பும், குடியேற்றமும் கொலம்பஸைக் கலக்காமலே செய்யப்பட்டன.

கொலம்பஸ் நான்காவது முறையாக ஒரு பயணத்திற்கு அனுமதிபெற்று புதிய கண்டத்தின் தெற்குப் பகுதியில் சில இடங்களுக்குச் சென்றுவிட்டுத் திரும்பினான். இம்முறை அவன் மிகவும் ஆற்றல் குறைந்து, ஆளுப் ஒடுங்கிப் போயிருந்தான். அவனுக்கும் போதுமான அளவு ஆதரவை அவ்வப்போது அளித்துவந்த இஸபெல்லாவும் இறந்துவிட்டாள். ஸ்பெயினில் அரசியல் நெருக்கடிகள் பல ஏற்பட்டன. கொலம்பஸ் தன் இறுதிநாட்களில் ஆதரவற்று நோய்வாய்ப்பட்டு 1537 மே 21-ம் நாள்

வினாவும் விளக்கமும்

[இரா. நெடுஞ்செழியன்]

பார்ப்பனர்களைப் பொறுத்து தி. மு. கழகத்தின் கருத்தென்ன?

"வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை வெறுக்கிறோமேயல்லாது, வெள்ளைக்காரர்களை அல்ல" என்று, தேசியப் போராட்டக் காலங்களில் எப்படிப்பட்டத் தன்மையை உள்ளடக்கியதாக வைத்துக் கூறப்பட்டதோ, அதே தன்மையின் அடிப்படையில்தான், "நாம் பார்ப்பனீயத்தை வெறுக்கிறோமே யல்லாது, பார்ப்பனர்களை அல்ல" என்று திராவிட முன்னேற்றக் கழகமும் கூறுகிறது. கழகம் ஒன்றாக இருந்த காலத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்திவந்தார்கள். அன்று ஏற்றுக்கொண்ட அதே கருத்தைத்தான், முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி வளர்க்கும் நிலையிலும் முன்னேற்றக் கழகத்தார் கடைப்பிடித்து வருகிறார்கள். "திராவிட நாட்டில் பார்ப்பானும் பறையனும் இருப்பார்களா?" என்று கேட்கும்போதெல்லாம், "திராவிட நாட்டில் பார்ப்பானும் இருக்கமாட்டான், பறையனும் இருக்கமாட்டான், மனிதன்தான் இருப்பான்" என்று பெரியார் இராமசாமி அடிக்கடி பதிலிறுத்துள்ளார்கள். ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலத்திற்குமுன்பு சென்னை இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் பெரியார் பேசும்போது, பார்ப்பனர்களில் நண்பர்கள் பலர் தமக்கு உண்டென்றும், அவர்களைத் தனிப்பட்ட முறையில் தாம் வெறுப்பதில்லை என்றும், ஆரியத் தன்மையைத்தான் தாம் வெறுப்பது என்றும் கருத்தமையும்படி குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் கருத்தை இன்று மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியமோ, அவசரமோ ஏற்பட்டிருப்பதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கருதவில்லை.

பார்ப்பனீயம் பார்ப்பனரல்லாதார்க்கு மட்டுமல்லாமல், பார்ப்பனர்க்கே தீங்கும், இழிவும் பயக்கக்கூடியதாகும் என்பதை உணர்ந்து, மனிதர்களாக மாறும் இயல்பு இப்பொழுது பார்ப்பன இளைஞர்களிடத்தே அரும்பியுள்ளது. பார்ப்பனரல்லாத சமுதாயம் அறியாமையில் மூழ்கியிருந்த காலத்தில், பார்ப்பனீயம் தன் முழு ஆதிக்கத்தையும் நிலைநாட்டிற்று; எப்படிப்பட்ட வஞ்சகப் பார்ப்பனீயத்திற்குத் தாம் சிறுகச்சிறுக அடிமையாகிறோம் என்பது தெரியாதிருந்த காலத்தில், பார்ப்பனரல்லாதாரும் அடிமைப்பட்டனர். அந்த அறியாமை அகலாத அளவுக்குப், பார்ப்பனீயமும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது. ஆனால் பகுத்தறிவு வளரும் அளவுக்குப் பார்ப்பனீயம் தேய்ந்துவருகிறது. இனி வருங்காலத்தில் வளரும் பகுத்தறிவைப், பார்ப்பனீயம் அழித்துவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. இனி வளருவது பகுத்தறிவாகத்தானிருக்கும்; தேய்வது பார்ப்பனீயமாகத்தானிருக்கும்! வளருவது திராவிடமாகத்தானிருக்கும், அழிவது ஆரியமாகத்தானிருக்கும்! பார்ப்பனீயத்தை அழித்துப் பகுத்தறிவை வளரச்செய்யும் அளவுக்கு வீரமும் தீரமும், வளமும் வலிவும் பகுத்

இயற்கை எய்தினான். அவனுடைய எலும்புகள் பிற்காலத்தவரால், அமெரிக்கா உள்பட பல இடங்களுக்கு அகற்றப்பட்டு, இறுதியாக கிரானடா என்ற நகரில் 1898-ல் புதைக்கப்பட்டது.

கொலம்பஸின் வாழ்க்கை வரலாறு வாட்டமுற்றுக் காணப்பட்டாலும், அவன் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டுப்போன அமெரிக்கா இன்று வளங்கொழித்துக் காணப்படுகிறது. கொலம்பஸின் அரிய தொண்டு உலகோரின் நினைவில் ஆழப்பதிந்துவிட்டது.

புதியகாலத்தை உருவாக்கவும், பொலிவாக்கவும் தோன்றியவைகளிலே அமெரிக்கக் கண்டுபிடிப்பு ஒன்றாகும்!

தறிவியக்கத்திற்கு—திராவிட இயக்கத்திற்குப் பெருகிக்கொண்டே வருகின்றன. எனவே தான், பார்ப்பனக் குலத்தில் பிறந்துவிட்ட இளை ஞர்களைத் திராவிடத்திற்கேற்ற பண்புடையவர் களாக மாற்றும் பெரும் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சியில் சிறிதளவு வெற்றி ஏற்பட்டிருப்ப தன் விளைவாகத்தான், நூற்றுக்கணக்கான 'பார்ப்பன' இளைஞர்கள், பார்ப்பனீயத்தை வெறுத்துப், பகுத்தறிவு இயக்கக் கொள்கை களையேற்றுக், கழகத்தோடு இணைந்து நின்று போராடக் கிளம்பியுள்ளார்கள்.

புத்தமதத்தில் பார்ப்பனர்கள் வஞ்சகமாகச் சேர்ந்து அந்த மதத்தினையே அழித்துவிட்டது போல, திராவிட இயக்கத்தில் சேரும் பார்ப்ப னர்கள், இயக்கத்தை அழித்துவிடக்கூடும் என்று சிலர் அச்சமுறக்கூடும். பார்ப்பனர்கள் வஞ்சகமாக புத்தமதத்தில் நுழைந்ததைப் போல் நுழைவதற்கு, இப்பொழுது வழியும் வகையுமில்லை. காலம் மாறியிருக்கிறது; கருத் துக்களும் வெளிப்படையாகவே இருக்கின்றன; பார்ப்பனீய வஞ்சகம் அவ்வளவு எளிதிலே நுழைந்துவிட முடியாது; அப்படியே நுழை வதானாலும் அதனைத் துரத்தி அடிக்கும் அறி வையும் ஆற்றலையும் கழகம் பெற்றிருக்கிறது; அது பற்றிய ஆபத்து ஏற்படும் என்று அச்ச முறவேண்டிய அவசியமில்லை.

பார்ப்பனீயம் என்பது பார்ப்பனர்களிடத் திலேமட்டும் காணப்படும் தன்மையாக இல்லா மல், பார்ப்பனரல்லாதாரையும் பற்றுக்கோடா கக்கொண்டு வாழும் தன்மையதாக இருந்து வருகிறது. பார்ப்பனரல்லாதாரிடத்தே படிந் திருக்கும் பார்ப்பனீயத்தை அகற்ற முற்படும் கழகம், சற்று அதிக வலிவோடும், பார்ப்பன ரிடத்துக் காணப்படும் பார்ப்பனீயத்தை அகற் றவும் முற்படுகிறது. "ஆரியம் ஆரியர்க்கே ஆபத் தைத் தருவது; அவர்களாலேயே வெறுக்கப்பட வேண்டியது" என்று அறிஞர் அண்ணா அவர் கள் கூறிய கூற்றுக்கிணங்க, பார்ப்பனர்களி லேயே சிலர் உணர்ந்து அதனை வெறுக்கத் தலைப்பட்டிருப்பதைக் காண்கிறோம். உணர்ந்த வர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு; உணர வேண்டியவர்கள் எண்ணிக்கை ஏராளம். முன்னைய எண்ணிக்கை பெருகி, பின்னைய எண்ணிக்கை நாளுக்குநாள் குறையும் என்பது உறுதி. எனவேதான் தி. மு. கழகம் "பார்ப் பனர்களை வெறுப்பதில்லை; பார்ப்பனீயத்தையே வெறுக்கிறது; அதனைத் தாங்கியிருப்பவர்கள் யார் யாரோ அவர்களை அந்த அளவுக்கு வெறுக் கிறது" என்ற கொள்கையைக் கொண்டிருக் கிறது.

பெரியார் இராமசாமி அவர்கள் தனிப்பட்ட பார்ப்பனர்களைப் பார்ப்பன குலத்திலே பிறந்து விட்டார்களே என்பதற்காக அவர்களை வெறுப் பதில்லை என்பதற்கு இலட்சுமிபுரம் யுவர் சங்கப் பேச்சும், ஆச்சாரியார், மாவூர் ஆர். எஸ். சர்மா ஆகியவரோடு கொண்டிருக்கும் நட்புறவும் போதுமான சான்றுகளாகும்!

எனவே 'பார்ப்பனர்கள்' இனிப் 'பார்ப்பன ராக' இல்லாமல், மனிதர்களாக மாறி, நிலத்திற் கேற்ற பண்பினை எற்று இந்நாட்டவர்களாகத் திகழவேண்டும் என்றுதான் திராவிட முன் னேற்றக்கழகம் அறிவுரை கூறுகிறது.

திராவிடநாட்டை வாழ்நிலமாகக் கொண் டுள்ள கிருத்தவர்களும், முஸ்லிம்களும், சைவர் களும், வைணவர்களும் எவ்வாறு மதவேறுபாடு களை விட்டு, மனந்திருந்திக், கழகக்கொள்கைகளை ஏற்று, அவற்றை ஈடேற்ற முனைந்து கழகத்தில் பங்குகொள்கிறார்களோ, அவ்வாறே பார்ப்ப னர்களும் மனந்திருந்திக் கழகத்தில் ஈடுபட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக்கழ கம் கருதுகிறது.

**

பணி செய்தல்

ஒரு வேளை புகை குடித்தற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத் தாயினும் ஒரு மனிதற்குப் பணிசெய்தல், இலட்சக்கணக்கான தியானங்களினும் மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவர்க்கு வரும்.

—விவேகானந்தர்.

:: தையற்கலை ::

[கே. பி. சுந்தரம் G. C. T.]

(யோக்) பிளவுஸ்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

16-ல் இருந்து 8 வரை $9\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + 1 அங்.)
17-ல் இருந்து 15 வரை $6\frac{1}{2}$,,
($1/_8$ மார்பு அளவு + 2 அங்.)
18-ல் இருந்து H வரை 3 அங்.)
(18-க்கும் 17-க்கும் [யோக்] இணைக்கவும்)
19-ல் இருந்து 8 வரை 2 அங்.
20 ல் இருந்து 19 வரை 3 ,,
21-ல் இருந்து 14 வரை 6 ,,
22-ல் இருந்து 23 வரை $3\frac{1}{2}$,,
23-ல் இருந்து 14 வரை $3\frac{1}{4}$ அங்.
24-ல் இருந்து 14 வரை 7 ,,
25-ல் இருந்து 24 வரை $\frac{1}{2}$,,
(24 27 எண்களை இணைக்கவும்)
26-ல் இருந்து 25 வரை $\frac{1}{2}$,,
27-ல் இருந்து 28 வரை $\frac{3}{4}$,,
28-ல் இருந்து K வரை $1\frac{1}{2}$,,
29-ல் இருந்து 30 வரை $3\frac{1}{2}$ அங்.

1, 11, 6, 8, 9, 10, 1 எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள்.

பின்பக்கம் யோக்கின் விளக்கம்

12, 13 எண்கள் உள்ள இடத்தில் புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை வெட்டியெடுத்து மேல் பக்கத்தில் பைப்பிங், அல்லது பைப்பிங் இல்லா மலும் இணைத்து யோக்கு (பின்பாகம்) அமைத்துக்கொள்ளவும்.

முன்பக்கம் யோக்கின் விளக்கம்

18, 17 எண்கள் உள்ள இடத்தில் புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை வெட்டியெடுத்து மேல் பக்கம் பைப்பிங் அல்லது பைப்பிங் இல்லாமலும் இணைத்து யோக்கு (முன்பக்கம்) மடிப்புடன் (பிளீட்) அமைத்துக்கொள்ளவும்.

19, 20 எண்கள் உள்ள இடத்தில் சைட் டக் அமைக்கவும். அகலம் $\frac{3}{4}$ அங்குலம் நீளம் 3 அங்குலம்.

29, 30 எண்கள் உள்ள இடத்தில் தோள் பக்கம் டக் அமைக்கவும். அகலம் $\frac{3}{4}$ அங்குலம் நீளம் $3\frac{1}{2}$ அங்குலம்.

28, K எண்கள் உள்ள இடத்தில் (ரியாத்) தோள் வளைவில் டக் அமைக்கவும். அகலம் $\frac{1}{2}$ அங்குலம். நீளம் $1\frac{1}{2}$ அங்குலம்.



3, 9 எண்களுக்கு மத்தியில் பின்பக்கம் (டார்ட்) டக் இரண்டு அமைத்துக் கொள்ளவும். அகலம் $\frac{3}{4}$ அங். நீளம் 7 அங்.

18, 17 எண்கள் உள்ள இடத்தில் கீழ்ப்பக்கம் ஒரு பக்கத்திற்கு இரண்டு டக் (டார்ட்) அமைக்கவும். அகலம் $\frac{1}{2}$ அங். நீளம் $2\frac{1}{2}$ அங். அமைத்து, மேல் பக்கத்தில் புள்ளிகள் உடைய இடத்தில் மடிப்புகள் அமைத்து, முன்பக்கம் தைக்கவும். (மடிப்புக்குப் படத்தில் புள்ளிகள்வைத்துக் காட்டியபடி பக்கவாட்டத்தில் அரை அங்குலத் துணி விட்டு வெட்டவும்)

A, B உள்ள இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும். விளக்கப் படத்தின்வடிவம் போன்று அமைந்துள்ளனவா என்று மிக்கக் கவனத்துடன் ஒத்திட்டுப்பார்த்து பிறகு வெட்டத் தொடங்கவும்.

தறிவியக்கத்திற்கு—திராவிட இயக்கத்திற்குப் பெருகிக்கொண்டே வருகின்றன. எனவே தான், பார்ப்பனக் குலத்தில் பிறந்துவிட்ட இளைஞர்களைத் திராவிடத்திற்கேற்ற பண்புடையவர்களாக மாற்றும் பெரும் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சியில் சிறிதளவு வெற்றி ஏற்பட்டிருப்பதன் விளைவாகத்தான், நூற்றுக்கணக்கான 'பார்ப்பன' இளைஞர்கள், பார்ப்பனீயத்தை வெறுத்துப், பகுறித்தறிவு இயக்கக் கொள்கைகளையேற்றுக், கழகத்தோடு இணைந்து நின்று போராடக் கிளம்பியுள்ளார்கள்.

புத்தமதத்தில் பார்ப்பனர்கள் வஞ்சகமாகச் சேர்ந்து அந்த மதத்தினையே அழித்துவிட்டது போல, திராவிட இயக்கத்தில் சேரும் பார்ப்பனர்கள், இயக்கத்தை அழித்துவிடக்கூடும் என்று சிலர் அச்சமுறக்கூடும். பார்ப்பனர்கள் வஞ்சகமாக புத்தமதத்தில் நுழைந்ததைப் போல் நுழைவதற்கு, இப்பொழுது வழியும் வகையுமில்லை. காலம் மாறியிருக்கிறது; கருத்துக்களும் வெளிப்படையாகவே இருக்கின்றன; பார்ப்பனீய வஞ்சகம் அவ்வளவு எளிதிலே நுழைந்துவிட முடியாது; அப்படியே நுழைவதானாலும் அதனைத் துரத்தி அடிக்கும் அறிவையும் ஆற்றலையும் கழகம் பெற்றிருக்கிறது; அது பற்றிய ஆபத்து ஏற்படும் என்று அச்சமுறவேண்டிய அவசியமில்லை.

பார்ப்பனீயம் என்பது பார்ப்பனர்களிடத்திலேமட்டும் காணப்படும் தன்மையாக இல்லாமல், பார்ப்பனரல்லாதாரையும் பற்றுக்கோடாகக்கொண்டு வாழும் தன்மையதாக இருந்து வருகிறது. பார்ப்பனரல்லாதாரிடத்தே படிந்திருக்கும் பார்ப்பனீயத்தை அகற்ற முற்படும் கழகம், சற்று அதிக வலிவோடும், பார்ப்பனரிடத்துக் காணப்படும் பார்ப்பனீயத்தை அகற்றவும் முற்படுகிறது. "ஆரியம் ஆரியர்க்கே ஆபத்தைத் தருவது; அவர்களாலேயே வெறுக்கப்பட வேண்டியது" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கூற்றுக்கிணங்க, பார்ப்பனர்களிலேயே சிலர் உணர்ந்து அதனை வெறுக்கத் தலைப்பட்டிருப்பதைக் காண்கிறோம். உணர்ந்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு; உணர வேண்டியவர்கள் எண்ணிக்கை ஏராளம். முன்னைய எண்ணிக்கை பெருகி, பின்னைய எண்ணிக்கை நாளுக்குநாள் குறையும் என்பது உறுதி. எனவேதான் தி. மு. கழகம் "பார்ப்பனர்களை வெறுப்பதில்லை; பார்ப்பனீயத்தையே வெறுக்கிறது; அதனைத் தாங்கியிருப்பவர்கள் யார் யாரோ அவர்களை அந்த அளவுக்கு வெறுக்கிறது" என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது.

பெரியார் இராமசாமி அவர்கள் தனிப்பட்ட பார்ப்பனர்களைப் பார்ப்பன குலத்திலே பிறந்துவிட்டார்களே என்பதற்காக அவர்களை வெறுப்பதில்லை என்பதற்கு இலட்சுமிபுரம் யுவர் சங்கப் பேச்சும், ஆச்சாரியார், மாஜி ஆர். எஸ். சர்மா ஆகியவரோடு கொண்டிருக்கும் நட்புறவும் போதுமான சான்றுகளாகும்!

எனவே 'பார்ப்பனர்கள்' இனிப் 'பார்ப்பனராக' இல்லாமல், மனிதர்களாக மாறி, நிலத்திற்கேற்ற பண்பினை ஏற்று இந்நாட்டவர்களாகத் திகழவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக்கழகம் அறிவுரை கூறுகிறது.

திராவிடநாட்டை வாழ்நிலமாகக் கொண்டுள்ள கிருத்தவர்களும், முஸ்லிம்களும், சைவர்களும், வைணவர்களும் எவ்வாறு மதவேறுபாடுகளைவிட்டு, மனந்திருந்திக், கழகக்கொள்கைகளை ஏற்று, அவற்றை ஈடேற்ற முனைந்து கழகத்தில் பங்குகொள்கிறார்களோ, அவ்வாறே பார்ப்பனர்களும் மனந்திருந்திக் கழகத்தில் ஈடுபட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக்கழகம் கருதுகிறது.

**

பணி செய்தல்

ஒரு வேளை புகை குடித்தற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாயினும் ஒரு மனிதற்குப் பணிசெய்தல், இலட்சக்கணக்கான தியானங்களினும் மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவர்க்கு வரும்.

—விவேகானந்தர்.

:: தையற்கலை ::

[கே. பி. சுந்தரம் G. C. T.]

(யோக்) பிளவுஸ்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

16-ல் இருந்து 8 வரை 9½ அங்.
(¼ மார்பளவு + 1 அங்.)
17-ல் இருந்து 15 வரை 6½ „
(1/8 மார்பு அளவு + 2 அங்.)
18-ல் இருந்து H வரை 3 அங்.)
(18-க்கும் 17-க்கும் [யோக்] இணைக்கவும்)
19-ல் இருந்து 8 வரை 2 அங்.
20 ல் இருந்து 19 வரை 3 „
21-ல் இருந்து 14 வரை 6 „
22-ல் இருந்து 23 வரை 3¼ „
23-ல் இருந்து 14 வரை 3¼ அங்.
24-ல் இருந்து 14 வரை 7 „
25-ல் இருந்து 24 வரை ½ „
(24 27 எண்களை இணைக்கவும்)
26-ல் இருந்து 25 வரை ½ „
27-ல் இருந்து 28 வரை ¾ „
28-ல் இருந்து K வரை 1½ „
29-ல் இருந்து 30 வரை 3½ அங்.

1, 11, 6, 8, 9, 10, 1 எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள்.

பின்பக்கம் யோக்கின் விளக்கம்

12, 13 எண்கள் உள்ள இடத்தில் புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை வெட்டியெடுத்து மேல் பக்கத்தில் பைப்பிங், அல்லது பைப்பிங் இல்லாமலும் இணைத்து யோக்கு (பின்பாகம்) அமைத்துக்கொள்ளவும்.

முன்பக்கம் யோக்கின் விளக்கம்

18, 17 எண்கள் உள்ள இடத்தில் புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை வெட்டியெடுத்து மேல் பக்கம் பைப்பிங் அல்லது பைப்பிங் இல்லாமலும் இணைத்து யோக்கு (முன்பக்கம்) மடிப்புடன் (பிளீட்) அமைத்துக்கொள்ளவும்.

19, 20 எண்கள் உள்ள இடத்தில் சைட் டக் அமைக்கவும். அகலம் ¾ அங்குலம் நீளம் 3 அங்குலம்.

29, 30 எண்கள் உள்ள இடத்தில் தோள் பக்கம் டக் அமைக்கவும். அகலம் ¾ அங்குலம் நீளம் 3½ அங்குலம்.

28, K எண்கள் உள்ள இடத்தில் (ரியாத்) தோள் வளைவில் டக் அமைக்கவும். அகலம் ½ அங்குலம். நீளம் 1½ அங்குலம்.



3, 9 எண்களுக்கு மத்தியில் பின்பக்கம் (டார்ட்) டக் இரண்டு அமைத்துக் கொள்ளவும். அகலம் ¾ அங். நீளம் 7 அங்.

18, 17 எண்கள் உள்ள இடத்தில் கீழ்ப்பக்கம் ஒரு பக்கத்திற்கு இரண்டு டக் (டார்ட்) அமைக்கவும். அகலம் ½ அங். நீளம் 2½ அங். அமைத்து, மேல் பக்கத்தில் புள்ளிகள் உடைய இடத்தில் மடிப்புகள் அமைத்து, முன்பக்கம் தைக்கவும். (மடிப்புக்குப் படத்தில் புள்ளிகள்வைத்துக் காட்டியபடி பக்கவாட்டத்தில் அரை அங்குலத் துணி விட்டு வெட்டவும்)

A, B உள்ள இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும். விளக்கப் படத்தின்வடிவம்போன்று அமைந்துள்ளனவா என்று மிக்கக் கவனத்துடன் ஒத்திட்டுப்பார்த்து பிறகு வெட்டத் தொடங்கவும்.

Regd. No. M 6296

"மன்றம்" வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் எழுதியவை :

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0 12 0
மறைந்த திராவிடம்	0 3 0

இரா. செழியன் எழுதியவை :

ராஜாடி ராஜா! (கதைத்தொகுப்பு)	0 12 0
பொது அறிவு (கட்டுரைத் தொகுப்பு)	0 8 0

கிடைக்குமிடம் :

மன்றம் பதிப்பகம்
26, நைனியப்பன் தெரு
மண்ணடி, சென்னை-1.

விற்பனையாளர்க்கு

"மன்றம்" விற்பனையாளர்களில், உடனுக்குடன் பட்டியல் தொகையை அனுப்பிவைக்காமல் காலந்தாழ்த்தியும், அதிக நிலுவை நிறுத்திவைத்தும் தொல்லை கொடுப்பவர்களின் செயல் மிக வருந்தத்தக்கதாக இருக்கிறது. அவர்கள், கடமையையும் நாணயத்தையும் காப்பாற்றுவது அவர்களுக்கும் எமக்கும் நலம் பயப்பதாகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். ஒழுங்காகத் தொகை அனுப்பிவரும் விற்பனையாளர்க்கு எமது நன்றி.

நிர்வாகி, "மன்றம்"

சந்தாத் தோழர்களுக்கு

"மன்றத்"தின் சந்தாதாரர்கள் தங்கள் சந்தா முடியும் காலத்திற்கு முன்பே, சந்தாத் தொகையை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு சந்தாதாரரும் தங்கள் நண்பர்களை "மன்றத்"தின் சந்தாதாரர்களாகச் சேர்ப்பதைத் தங்கள் கடமையாகவும், எமக்குச் செய்யும் பேருதவியாகவும் கருதும்படி வேண்டிக் கொள்கிறோம். பத்துச் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுப்பவர்களுக்குத் தனியாக ஒரு சந்தா இனாமாகப் பதிந்து கொள்ளப்பெறும்.

நிர்வாகி, "மன்றம்"

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.